# தமிழர் தகவல்

## Tamils' Information

பெப்ரவரி 2005
இலண்டன்




**சுனாமியுடன் சங்கமமான எம் உறவுகளுக்காக...**

மாத சோதிடம்
உள்ளே !

மாதாந்திர செய்திச் சஞ்சிகை

A monthly information digest


லெக்ஷ்மியின் தங்கம்
அதிர்ஷ்டத்தின் அங்கம்
Lakshmis
Jewellers
276 High Street North London E12 6SA U.K.
Tel : 020 8470 5600 Fax : 020 8470 3448




**வாசித்துவிட்டீர்களா ? தமிழர் தகவல் பொங்கல் மலர்**

**இப்போது லண்டனில் உள்ள பிரபல கடைகளில் விற்பனை ஆகிறது**




44 ஈழத்துச் சிறுகதைகள், கட்டுரைகள், வண்ணப்படங்கள்,
துல்லியமாக கணிக்கப்பட்ட ஒரு வருடத்துக்கான சோதிடப் பலன்கள்
திருவண்ணாமலையில் ஐரோப்பிய குடும்பம்.
ஒவ்வொருவர் வீட்டிலும் இருக்கவேண்டிய மலர். இதன் விலை 5 பவுண் மட்டுமே

இப்பொழுது லண்டனில் பரபரப்பாக விற்பனையாகிறது

# Raicon

100% குரக்கன்



நீரிழிவிற்கு
மிகவும்
ஏற்ற உணவு

தினமும் அரிசி சாதம் சாப்பிட்டு சாப்பிட்டு அலுத்து விட்டோம். அதற்கு இணையாக சுவையான சத்தான மாற்று உணவு தேவை. அந்த மாற்று உணவாக வந்திருப்பதுதான் ரெய்கான். சாதாரண அரிசி சாதம் செய்வதுபோலவே, குக்கரில் வேக வைத்து சமைக்க முடியும். நமக்கு விருப்பப்பட்ட மாதிரி பருப்பு, சாம்பார், குழம்பு, ரசம், மோர் அல்லது தயிர் சேர்த்து சாப்பிட்டால் சுவை தருகிறது. ரெடிமேட் உணவான புளியோதரை, லெமன், ப்ரைடு ரைஸ், பிரியாணி ஆகியவைகளை செய்தாலும் தித்திக்கும். ரெய்கான் 100% குரக்கன். கலப்படமற்றது. சுத்தமானது. சர்க்கரை நோயாளிகள் ருசியான சாதம் இனி ரெய்கானில் சாப்பிடலாம்.

இலண்டனில்
முதல் முறையாக
அரிசிக்கு மாற்றாக
ரெய்கான்
100% குரக்கன்



# Rotin

குரக்கன் ரவை



100% குரக்கனிலிருந்து சுவையான சத்தான உடனடி டிபன் உப்புமா செய்வதற்கென்றே தயாரிக்கப்பட்டதுதான் ரொட்டின் குரக்கன். மற்ற எந்த ரவையிலும் இல்லாத அளவில் சத்தும் சுத்தமும் இதில் உள்ளது. மற்ற எந்த ரவையிலும் இல்லாத சுத்தமான குரக்கன் ரவையான ரொட்டின் 100% குரக்கனில் கலப்படமில்லாமல் தயாரிக்கப்பட்டதுதான் ரொட்டின் குரக்கன் ரவை.

இலண்டனில்
முதல் முறையாக
100% குரக்கனில்
தயாரானதுதான்
ரொட்டின்
குரக்கன் ரவை



விற்பனையாளர் :
**SHARON**
311-313 MICHAM ROAD
SW17 9JQ LONDON
TEL : 0208 6729353 0208 6463152

ஏக விநியோகத்தர் :
திருமுருகன் அறிவகம்
போன் : 020 8480 3320

---

## மிகத் தரமானதென லண்டன் வாழ் மக்கள் நன்கு உணர்ந்து கேட்டு வாங்கி பாவிக்கும் அதிசிறந்த கறி மிளகாய்த்தூள்




**SHARON**
311-313 MICHAM ROAD SW17 9JQ LONDON
TEL : 0208 6729353 0208 6463152

---

## எங்கள் தரம் மிகவும் உயரத்தில்




தாயகத்தின் ருசியை மீண்டும் அனுபவித்தேன் !

எலுமிச்சம் பழத்தைப் பாதிகளாக வெட்டி, எதையெதையோ பக்குவமாகச் சேர்த்து பனை ஓலைத்தட்டிலே வீட்டு முற்றத்தில் பல நாட்கள் காயவைத்துப் பதம் சேர்த்து, என் உயிரான அம்மா செய்த ஊறுகாயைத் தொட்டுத் தொட்டுத் தயிரோடு சாப்பிட்டக் காலங்களை நினைத்து நினைத்து நான் வாய் ஊறியதுண்டு.

அகதியாக இந்த அந்நிய மண்ணில் தஞ்சமடைந்த பதினெட்டு ஆண்டுகாலத்தில் அவ்வப்போது அந்த ஊறுகாய், இந்த ஊறுகாய், யாழ்ப்பாண Style ஊறுகாய், ஈழத்து ஊறுகாய் என்று எல்லாம் வாங்கிச் சுவை பார்த்து அன்றோடு விட்டதுமுண்டு. போத்தலைத் திறந்தால் எண்ணெய் மிதக்கும். வயிற்றைக் குமட்டும்.

சமீபத்தில் எனக்கேற்பட்ட அனுபவத்தை உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன்.

'ஈழ மக்களுக்கு ஏற்ற வகையில் தயாரிக்கப்பட்டது ' No Added Oil என்ற லேபல்களுடன் 'கற்பகம் ' தயாரிப்பு என்று அறிவிக்கப்பட்டிருந்த எலுமிச்சம்ப்ழ ஊறுகாய்ப் போத்தலை வாங்கினேன். ஊரிலே அம்மா செய்து தந்த ஊறுகாயின் சுவையைக் குறிப்பிட்டிருந்தேனல்லவா? அதனை அனுபவித்தேன். அந்த ஊறுகாயும், தயிரும் இருந்தால் போதும், சோற்றைச் சாப்பிடுவதற்கு. பல ஆண்டுகால என் நாவின் ஏக்கத்துக்கு 'கற்பகம்' ஊறுகாய் தாயின் ருசி தந்தது.

அந்நிய மண்ணில் வாழும் தாயக மக்கள் மீது வியாபாரம் செய்வது பிழையில்லை. ஆனால்... உடல் நலத்துக்கு ஊறு விளைவிக்கக்கூடிய 'கலப்படங்களை' 'ஈழம்', 'தாயகம்' என்ற லேபல்களை ஒட்டிப் போலிகளை வியாபாரம் செய்து ஒருசிலர் கோடீஸ்வரர்களாகிக் கொண்டிருப்பதுதான் பொறுக்கமுடியவில்லை.

'கற்பகம்' போன்று சுத்தமான ஊறுகாய்களைத் தயாரித்து, அவற்றை வியாபாரம் செய்பவர்களை இனங்கண்டு அவர்களை நாங்கள் ஊக்குவிக்க வேண்டும் என்பதுதான் என் ஆதங்கம்

நன்றி: புதினம்

# தமிழர் தகவல் Tamils' Information

பெப்ரவரி 2005 | மலர் : 02 | இதழ் : 20

" பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்." – குறள்

## ஆழிப்பேரலைகளும் அழிந்துபோன தமிழ் உயிர்களும் !

கெட்ட குடிதான் கெடும் என்பதும், பட்ட காலில்தான் படும் என்பதும் முந்நாட்களிலிருந்து தொடர்ந்து வரும் முதுமொழி. 26.12.2004 அன்று சுழன்றெழுந்த ஆழிப்பேரலைகளின் அழிவுகளில் தென் ஆசியப் பிரதேசங்கள் பல அழிவுக்குள்ளாயின. இறந்துபோன உயிர்கள் இரண்டு லகரங்களைத் தாண்டிவிட்டன. சொத்துகள் கடலால் சூறையாடப்பட்டுவிட்டன. நிலங்கள் பல நீருள் மறைந்துபோயின. இத்தனை இழப்புகளிலும் தமிழினத்தின் இழப்புகள்தான் தாள முடியாத வேதனையை உடையன. தமிழகத்திலும், தமிழீழத்திலும் முப்பதினாயிரத்துக்கும் மேல் உயிர்கள் உடைமைகளுடன் இழக்கப்பட்டுவிட்டன. அழிக்கப்பட்ட அந்த உயிர்கள் இனி மீட்கப்படமுடியாதவை. எனினும் அல்லல்பட்டு நிற்கும் தமிழனுக்கு அவன் தமிழன் என்பதால், இதுவரையில் அவனுக்குரிய மனிதாபிமான நிவாரணங்கள்கூட மறுக்கப்பட்டு வருகின்றமைதான் வேதனையான மனத்தை நெகிழ வைக்கும் நினைவுகளாகின்றன. இயற்கை அரக்கனால் குதறப்பட்டு கொடுந்துயருள் மூழ்கியுள்ள மண்ணையும், மக்களையும் காண வந்த ஐக்கிய நாடுகள் சபையின் கொபி அனான் கூட சிறீலங்காவின் தடுப்புச்சுவர்களை தாண்ட முடியாது போனார். அதுதான் சிங்கள ஏகாதிபத்தியத்தின் உண்மையான வடிவம்.

இந்த இக்கட்டான நிலையின்போது கூட சிறீலங்காவின் அரசு ஊடகங்கள் கண்ணியமாக நடந்துகொள்ளவில்லை. வழமையான பொய்களையும், மிகைப்படுத்தல்களையும், தமிழர்களின் அழிவுகளை நையாண்டி செய்வதிலும்தான் அவை ஈடுபட்டிருந்தன என்பதுதான் அருவருப்பான உண்மை. இந்த இழப்புகளினூடேயாவது புலிகள் பலமிழந்து போகமாட்டார்களா என்ற விசித்திரமான ஒரு அங்கலாய்ப்பைத்தான் அவை வெளிப்படுத்தின. அதற்காக சவப்பெட்டியையும் தயார் செய்தன. அவர்களது தந்திகள் எல்லாம் வெறும் வதந்திகள் என்று வெளியுலகம் விளங்கிக் கொண்டதும் வேண்டா வெறுப்பாக அதற்கான வியாக்கியானம் செய்து பின்வாங்கின. பனையால் விழுந்தவனை மாடு ஏறி மிதித்த கதைதான் இது. இந்தத் துன்ப நேரத்திலாவது தேசியத் தலைமை துவண்டுவிட மாட்டாதா என்ற அவர்களது கனவு கூட வழமைபோல் கலைந்துபோய்விட்டது. இனிமேல் இந்தக் களிமண்ணும் சுடு மண்ணும் ஒட்டிக் கொள்ளுமா ? உலக நாடுகளுள் இப்போது உண்டாக்கிபோன எண்ணமிது. இதுதான் ஆழி நமக்குக் கொடுத்த அனுக்கிரகம். விடுதலைப்புலிகள் தமது கோட்பாடுகளை சிங்கள மக்களிடம் விளக்கவேண்டும் என்று குரலெழுப்பும் அரைவேக்காட்டு இலங்கை ஊடகங்களும், புலம்பெயர்ந்த தமிழர்களும் இன்றும் இருக்கிறார்கள். அதே போன்று தமிழகத்தில் உள்ள சில பிராமணப் பத்திரிகைகள் எமது தேவைகளைத் திரிவுபடுத்தி உபதேசம் என்ற பெயரில் உபத்திரவம் தருகின்றன. இவர்கள் இப்படித்தான் முன்பும் இருந்தார்கள். இனியும் இருப்பார்கள். இவர்கள் பாவம், கோதை வளர்த்த கிளிகள்; கோவிந்தா போட மாத்திரம்தான் தெரியும். ஆகவே இவர்களை இனியும் நினைவில் நாம் வைத்திருக்க முடியாது.

தம் கையே தனக்குதவி என்பதுபோல் ஈழத்தமிழ் மண்ணின் துயர்களுக்கு புலம் பெயர் தமிழ் ஈழத்தவர்களும், அன்பு இதயங்கொண்ட ஆதரவாளர்களுமே அள்ளிக் கொடுத்திருக்கிறார்கள். காலத்தினால் செய்த உதவி பாராட்டப்பட வேண்டியதும் நினைவில் நிறுத்தி நன்றி சொல்ல வேண்டியதுமாகும். அநர்த்தங்கள் நிகழ்ந்தவுடன் தமிழீழத்தை நோக்கிச் சில வெளிநாட்டுத் தூதரகங்கள், நிறுவனங்கள் விரைந்து சென்று உதவின என்பதைக் கேட்கும்போது இதயத்தால் இங்கிருந்து அவர்கட்கு நன்றி சொல்கிறோம். அழிக்க நினைக்கும் ஏகாதிபத்தியங்களின் இறுக்கத்துள் துளிர்க்க நினைக்கும் எமக்கு அவர்களின் துணை தேவையாக இருக்கிறது. ஒவ்வொருமுறை ஈழத்தமிழன் விழுகின்ற போதும் அதைவிட வேகமாக எழுந்திருப்பதுதான் அவனது வரலாறும், அந்த வரலாற்றின் பெருமையுடைய தலைமையுமாகும்.

இப்போது நடந்து முடிந்த ஆழிப் பேரலைகளின் அழிவுகள் நமக்கு இனியாவது ஒரு உறுதியான எதிர்கால உணர்வுகளை ஏற்படுத்தவேண்டும். முக்கியமாக நமது மண்தான் நமக்குப் பாதுகாப்பு என்ற எண்ணங்களையும், கொழும்பு என்பது குறுகியகால - நிலையற்ற வதிவிடம்தான் என்பதையும் தெளியப்படவேண்டும். அகதியாகப் புலம் பெயர்ந்து வந்தபின், அதனால் கிடைத்த வசதிகளை மீண்டும் அடிவாங்கிய அதே நகரில் முதலீடு செய்யும் புலம் பெயர் தமிழர்கள் இப்போதாவது விழித்துக் கொள்ள வேண்டும். சிறீலங்காவின் தற்போதைய சூழ்நிலைகள் அதற்கு இப்போது கட்டியம் கூறி நிற்கின்றன. புதிய ஒரு அரசியல் ஆய்வின்படி, சிறீலங்காவில் ஏற்படப்போகும் அரசியல் மாற்றங்கள் எக்காலத்திலும் இனி தமிழர்பக்கம் சாயப்போவது இல்லை. சிறீலங்கா அரசு சுனாமியில் சுட்டிக்காட்டி நிற்பது அதைத்தான். நமது முதலீடுகள் தமிழீழத்துக்கு வெளியில் முடக்கப்படுதல், தமிழர்களின் மிகப்பெரிய பலவீனமாகி அதுவே மீண்டும் ஒரு கறுப்பு யூலையை அனுபவிக்கக் காரணமாகலாம். ஏனெனில் அரச படைகளும், அதை விட்டு ஓடிப்போன ஆயுதபாணிகளும் அவற்றில் இருந்து பிறந்த பாதாள உலக தாதாக்களும், அவர்களுக்கு முண்டு கொடுத்து நிற்கும் ஒரு முரட்டுத்தனமான நாகரிகமற்ற அரசியல் சக்தியும், இந்தச் சக்திகளுக்கு வலுவூட்டிநிற்கும் வல்லாதிக்கங்களும் சிறீலங்காவை நீண்ட காலத்துக்கு நிம்மதியாக இருக்க அனுமதிக்கமாட்டா. இவைகள் எவற்றாலும் ஊடுருவ முடியாத பலமான தலைமையும், மக்களும் தமிழீழத்தில்தான் உள்ளனர். ஆகவேதான் ஏகாதிபத்தியங்கள் எம்மை குறிவைக்கின்றன. சிறீலங்காவில் எப்போது அதன் கழுத்தை நெருடப் போகின்றன என்பதைக் காலம் விரைவில் உணர்த்தப்போகிறது. அதுவரை தமிழன் காத்திருக்கப் போகிறானா ?

– ஆசிரியர்

முகவரி :
41, HADDINGTON ROAD,
BROMLEY,
KENT BR1 5RG, U.K.

தொலைபேசி :
020 8480 3320

Email :
tamilarthakaval@yahoo.co.uk

வெளியீடு :
திருமுருகன் அறிவகம்
இலண்டன்
Thirumurugan Arivagam
London

ஆசிரியர் :
அரவிந்தன்
Editor :
Aravindan

வங்கி :
H.S.B.C
A/C Name :
TAMILS' INFORMATION
SORT CODE : 40-35-30
A/C No. : 81437100

கணணி, அச்சுப்பதிப்பு :
தமிழர் தகவல்

Computering & Printing :
Thamizhar Thagaval

£ 6.00 தபாற் செலவை
மேற்படி வங்கியில்
செலுத்தின்
வருடம் முழுவதும்
" **தமிழர் தகவல்** "
உங்கள்
இல்லம்தேடி வரும்

படைப்புகள்
ஆக்கியோரின்
உரிமைகளே

தமிழர்களே ! தமிழர்களுடன் தமிழில் பேசுங்கள்

வாசகர்களே ! எமது விளம்பரதாரர்களை மனமுவந்து ஆதரியுங்கள் !

## ஈழத்தமிழருக்கு உதவுக !

'' இலங்கையிலும் ஆழிப்பேரலைகளின் விளைவாகப் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. ஈழத்தமிழர்களின் நடுவில் வரலாறு காணாத வகையில் பேரழிவு ஏற்பட்டுள்ளது. தமிழக மக்களோடு தொப்புள் கொடி உறவு பூண்ட அந்த மக்களுக்கு உதவவேண்டிய கடமை நமக்குண்டு. தமிழக அரசின் சார்பில் உணவுப்பொருட்கள், துணிகள், மருந்துகள், மருத்துவக் குழுவினர் ஆகியவற்றை உடனடியாக ஈழத்தமிழர் பகுதிக்கு அனுப்பி மனிதநேய உதவிபுரியுமாறு தங்களை வேண்டிக் கொள்கிறேன்.

உலகத் தமிழர் பேரமைப்பின் சார்பில் திரட்டப்படும் நிதி, பொருட்கள் ஆகியவற்றில் ஒரு பகுதியை, ஈழத்தமிழருக்குத் தங்கள் மூலம் அனுப்ப நாங்கள் அணியமாக உள்ளோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். ''

(முதலமைச்சர் ஜெயலலிதாவுக்குத் தலைவர் பழ. நெடுமாறன்)

## சுனாமியும், சுவாமியும்

'' ...வழக்கம்போல் பழமைவாதிகளும், மதவாதிகளும் பழியை அப்பாவியான கடவுள்மீது போட்டுவிட்டார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் ஜெயலலிதா பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்துச் சுனாமியால் ஏற்பட்ட அழிவுகள் கடவுள் சித்தம் என்று சொல்லியிருக்கிறார். பதைக்கப் பதைக்க இரண்டு இலட்சம் மக்களைக் கொன்று குவித்த சுனாமி, கடவுள் சித்தத்தால் ஏற்பட்டது என்பது அந்தக் கடவுளை கருணையற்ற ஒரு பாபியாக சித்தரிக்கும் முயற்சியாகும். ஜெயலலிதா சொல்வது உண்மை என்றால் அவர் குறிப்பிடும் கடவுள் கடவுளாகவே இருக்கமுடியாது.

திரைப்பட நடிகர் ரஜனிகாந்த் உலகில் பாபிகள் அதிகரித்ததால் இந்த அநர்த்தம் ஏற்பட்டது என்று தத்துவம் பேசியுள்ளார். அவரை மன்னிக்கலாம். அந்தப் பாபிகளில் அவரும் ஒருவரா இல்லையா என்பதை அவர் சொல்லவில்லை. சங்கர மடத்தைச் சேர்ந்த காவி ஒன்று மடத்துக்குக் களங்கம் கற்பித்ததை பொறுக்காத ஆண்டவன் இந்த அனர்த்தத்தை ஏற்படுத்தி மக்களைத் தண்டித்துள்ளார் எனப் பேசியிருக்கிறார். சங்கராச்சாரியாரை தீபாவளியன்று கைது செய்தது ஜெயலலிதா. அவரல்லவா கடவுளின் தண்டனைக்கு ஆளாக வேண்டும் ? மாறாக ஒன்றும் அறியாத அப்பாவி மக்கள் ஏன் தண்டிக்கப்பட வேண்டும் ? ''

(கனடா நக்கீரன், தென் ஆசியச் செய்தி)

## ஒரு உறுதிமொழி !

'' எங்கள் கட்சியோ, எங்கள் அரசோ ஒருநாளும் ஈழமக்களுக்கு எதிரான நிலையை எடுப்போம் என்று கருதவேண்டாம், தனிப்பட்ட இழப்பு எதையும் கணக்கில் கொள்ளாமல் அம்மக்களின் நலன் என்ற அடிப்படையிலேயே சிக்கல்களை எதிர்கொள்வோம். இதுபற்றித் தலைமை அமைச்சரிடம் கூறியுள்ளேன். அவரைச் சந்தித்துப் பிற செய்திகளைப் பேசுங்கள். ''

(தலைவர் வைகோவிடம் திருமதி சோனியா )

'' நமது நாட்டில் இப்போது கோவிலுக்குப் போனால் செருப்பைக் காணோமென்கிறார்கள். மருத்துவமனைக்குப் போனவன் உறுப்பைக் காணோமென்கிறான். இவையெல்லாம் கடந்து ஆசிரமத்துக்குள் சென்றால் கற்பு காணாமல் போய்விடுகிறது. நாம் எங்கே போகிறோம் என்பது நமக்கே புரியவில்லை. ''

(ஒரு வழக்காடுமன்றத்தில் கவிஞர் சிற்பி இரகுநாதன்)

## உறுதியான நிலைப்பாடு !

'' ...யாரும் தவறாக எடுத்துக் கொள்வார்கள் என்று தோன்றவில்லை. இலங்கைத் தமிழர்களின் நலனுக்காக வாதிடுவதை ஒரு சங்கடமான விசயமாக நான் ஒருபோதும் நினைத்ததில்லை. விடுதலைக்காக ஆயுதம் ஏந்தாமல் போயிருந்தால் ஈழத்தமிழினம் நிரந்தர அடிமைகளாகவே இந்நேரம் ஆகியிருக்கும். சர்வதேச நாடுகள் இன்று அவர்களை அங்கீகரிக்கக் காரணமே அவர்களின் போராடும் சக்தியும், அவர்களது கோரிக்கையில் உள்ள நியாயமும்தான். அதற்கு மனச்சாட்சிப்படி குரல் கொடுக்கிறேன் நான். டெல்லியில் நான் சந்தித்த தலைவர்களும் இதை உணர்ந்துள்ளார்கள்.

சுனாமி அழிவுகளைப் பார்வையிட வந்த ஐ.நா. செயலாளர் கோபி அனானை ஈழத் தமிழ்ப் பகுதிகளுக்குப் போகவிடாமல் சாமர்த்தியமாகத் தடுப்பு வேலையில் இறங்கினார் சந்திரிகா. இந்தச் சோகத்திலும், பிரபாகரன் இறந்துவிட்டார் என்று அங்குள்ள வானொலி வதந்தி பரப்பித் திருப்தியடைகிறது. அப்படிப் பட்டவர்களுக்கு நமது நாட்டின் இராணுவம் கை கொடுக்காமல் இருக்க வேண்டும் என்று வாதிடுவதில் எனக்கென்ன சங்கடம் இருக்க முடியும். இந்த ஒப்பந்தம் நிறைவேறாமல் போவதில் முக்கிய பங்கு எனக்குத்தான் என்றால், அதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். ''

(தலைவர் வைகோவின் ஜூனியர் விகடன் பேட்டி)

## விழி பிதுங்கும் விபரீதம்

'' .... மீள் கட்டமைப்பு புணருத்தாரண நடவடிக்கைகள் என்ற பெயரில் வந்திறங்கியுள்ள அமெரிக்கப் படைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டால் சுனாமியால் பாதிக்கப்பட்ட தென் மாகாண மக்கள் ஜே.வி.பியைத் தூக்கி எறிந்துவிடுவார்கள். இங்கே அரசியல் நலன் செல்வாக்கை தக்க வைத்துக் கொள்வதற்காக ஜே.வி.பி. கைகட்டி நின்று வேடிக்கை பார்க்க வேண்டிதாகிவிட்டது. இதனால் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு ஜே.வி.பி கொடுத்து வந்த அழுத்தம் குறைந்துவிட்டது.

இப்போது ஜனாதிபதி சந்திரிகாவுக்கு உள்ள ஒரே நெருக்கடி விடுதலைப் புலிகள்தான். நிவாரணப் பணிகளில் புலிகளை ஓரங்கட்டிவிட்டு கிடைக்கும் உதவிகளைக் கொண்டு நாட்டின் பொருளாதாரத்தைச் சீர்படுத்தி விடலாம் என்று சந்திரிகா திட்டமிடுகிறார். ஆனால் புலிகள் அதற்கு விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லை. அதே நேரம் அமெரிக்காவைப் பகைத்துக் கொள்ளவும் புலிகள் விரும்பவில்லை. புலிகள் மிகவும் அவதானமாகக் காய்களை நகர்த்த வேண்டிய நிலையில் உள்ளனர்.

அமெரிக்கப்படைகளைப் பாதுகாப்புக்கும், வெளிநாட்டு உதவிகளைப் பொருளாதார மீட்சிக்கும் வைத்துக் கொண்டு தனது அரசியல் எதிரிகளை வழிக்குக் கொண்டு வந்துவிடலாம் என்று சந்திரிகா நினைத்துக் கொண்டிருக்கிறார். இதுவே எதிர்காலத்தில் பெரும் தலையிடியாகவும் இலங்கை முள்ளின் மீது விழுந்திருக்கிறது. எழுந்திருப்பது கடினம். ''

( சத்திரியன் - வீரகேசரி )

## விஜயகாந்த் உதவிக்கரம்

'' இலங்கை வாழ் மக்களைப் பெரிதும் தாக்கிய அலைகள், நம் தமிழர்கள் வாழும் பகுதியை அழித்துவிட்டதைக் கேள்விப்பட்டு பெரும் அதிர்ச்சியடைந்தேன். நம் தமிழர்பால் அன்பும் பாசமும் வைத்துள்ள நான் அவர்களுக்கு உதவும் வகையில் இலங்கை ரூபாய்க்கு ஆறு (600,000) இலண்டன் ஐங்கரன் பிலிம்ஸ் கருணா மூலமாக இலங்கையில் உள்ள செஞ்சிலுவை சங்கத்துக்கு அளித்துள்ளேன். ''

(நடிகர் விஜயகாந்த் - தினக்குரல் 16.01.2005)

வெம்பிளி, ரூட்டிங்கில்

# GLOBAL

## EXCHANGE LTD

Money Transfer to All Over the World

## குளோபல்

எக்சேஞ்ச் லிமிடெட்
உலகத்தின் எப்பாகத்திற்கும்
பணம் அனுப்ப
நம்பிக்கையான நிறுவனம்

54, Ealing Road, Wembley
Middlesex HA0 4TQ
Tel : 020 8902 3366
1081, Garrat Lane, Tooting
London SW 17 OLN

---

வோல்த்தம்ஸ்ரோவில்

## Shree Jewellers

வைரத்தாலிக்கொடிகள்,
சங்கிலிகள், காப்புகள், தோடுகள்,
மோதிரங்கள், நவரத்தினங்கள்,
நெக்லஸ்கள், மகரப்பதக்கங்கள்

### ஸ்ரீ ஜுவல்லர்ஸ்

வாரத்தின் ஏழு நாட்களும் கடை
திறந்திருக்கும் சாத்திர விதிப்படி,
பொருத்தமான நவரத்தின கற்கள் பதித்து
மோதிரம், பென்ரன், தோடு செய்து தரப்படும்

110, Hoe Street
Walthomstow
London E17 4QS
Tel : 020 8509 7588

---

வோல்த்தம்ஸ்ரோவில்



## KUMARANS
## குமரன்ஸ்
## TEXTILES

136, Hoe Street Walthamstow
London E17 4QR
Tel : 020 8521 3444, 8530 3033
Fax : 020 8521 9444

---

ரூட்டிங்கில்

## Yhaal House

சுத்தம், சுவை, தரம் மிக்க இலங்கை, இந்திய உணவு
வகைகளை எந்நேரத்திலும் எவ்வளவு தேவையாயினும் குறைந்த
விலையில் குன்றாத மனநிறைவுடன் பெற்றுக் கொள்ள
நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்



1, London Road
Tooting
London SW17 9JP
Tel : 020 8767 8585

---

ரூட்டிங்கில் முதல் தமிழ்க்கடை

## Prime Food & Wine

News Papers & Magazines, Off Licence - Grocery
Asian & Sri Lankan Groceries - Fruits & Vegetables
மனங்கவரும் மளிகைச்சாமான்கள், மென்பானங்கள்,
மதுபான வகைகள், பழங்கள், மரக்கறி வகைகள், மீன், இறைச்சி
என எல்லாவற்றிற்கும் குறைந்த விலையில்
நிறைந்தசேவையைப் பெற
எம்மை நாடுங்கள்



118, Tooting High Street
London SW 17 0RR
Tel : 020 8682 3777



---

539 A

வெம்பிளியில்

## ANGLO ASIAN CASH & CARRY

ENGLISH - ASIAN & AFRO CARIBBEAN GROCERY
FROZEN FOOD - FRUIT & VEG

TEL 020 8900 0444 அங்லோ ஏசியன் தமிழ்க்கடை TEL 020 8900 966

**ANGLO ASIAN CASH & CARRY**
373, Church Lane
Kingsbury NW9 8JB
Tel : 020 8200 1555 Mob : 07956 425 707

**ANGLO ASIAN CASH & CARRY**
539, High Road , Wembley HA0 2DN
Tel : 020 8900 0444 Fax : 020 8900 9666
Mob : 07956 425 707 web : www.angloasiangroup.uk

## ANGLO ASIAN

LONDON-COLOMBO COLOMBO-LONDON

Those willing to send parcels from Colombo to London and from London to Colombo by Air or by Sea are requested to contact us for such services at reduced Rates

**ANGLO ASIAN MINI MART**
*513, High Road,*
*Wembley HA0 2DN*
Tel : 020 8900 2451 Fax : 020 8903 8202
Mob : 07956 425 707

## பேரறிவு

" தெய்வங்கள் பலப்பல
சிந்தை செய்வாரும்
சேர்கதி பலப்பல
செப்புகின்றாரும்
பொய்வந்த கலைபல
புகன்றிடுவாரும்
பொய்ச்சமயாதியை
மெச்சுகின்றாரும்
மெய்வந்த திருவருள்
விளக்கம் ஒன்றில்லார்
மேல் விளை வறிகிலர்
வீணகழிக்கின்றார்
எய்வந்த துன்மொழித்
தவர்க்கறிவருள்வீர்
எனைப்பள்ளி எழுப்பிமெய்
இன்பந் தந்தீரே ! "

– வள்ளலார் சுவாமிகள்

## கழுகே வருக !

பிணங்களைத் தூக்க
வருவதுபோலே
தமிழரைத்
தாக்கத் தாவி வருகிற
கழுகே ! கழுகே !
வருக ! வருக !
இனத்துயர் நீக்க
இறங்கிடும் நேரம்
பணத்திமிர்
காட்டப் பதுங்கி வருகிற
கழுகே ! கழுகே !
வருக ! வருக !
செருக்குடன் இருக்கும்
சிங்கம் சிரிக்க
நெருக்கடி கொடுக்க
நெருங்கி வருகிற
கழுகே ! கழுகே !
வருக ! வருக !
உரிமையில் பிளந்து
உறவுடன்
இணைந்து
இருவரும்
வாழ
இருக்கும்
வாய்ப்பை
இழக்கத் துணிந்து
இழவு வீட்டில்
களவு செய்ய
அனுமதி கொடுக்கும்
அவரையும் விழுங்க வருகிற
கழுகே ! கழுகே !
வருக ! வருக !
பல்லின வாழ்வினுள்
பலிக்க கிடக்கும்
பணபியல் விழுமியப்
பன முகத் தன்மையை
ஒழித்து முடித்து
ஒற்றை ஆட்சியில்
உலகை ஒடுக்கத் துடித்து
ஓடிவருகிற
கழுகே ! கழுகே !
வருக ! வருக !
வியட்நாம் உதைத்ததில்
ஒடிந்ததுன் இடுப்பு !
அதற்கு மேலே
கொடுப்பதெம்
பொறுப்பு !
அண்டை நாடே
உனக்கிது
இழுக்கு !
அட.....
அறிவுடன் வருடிப்பார்
உன கழுத்திலும்
சுருக்கு !

– கவிஞர் அறிவுமதி

## நல்லவேளை

கணக்கின்றிக் கரங்கள்தமை
மனிதர்க்குப் படைத்திருந்தால் ...
கள்ளவோட்டு அடிக்கும் ஒரு கை
கலப்படம் செய்யும் ஒரு கை
கன்னியரை இழுக்கும் ஒரு கை
காட்டிக் கொடுக்கும் ஒரு கை
களவுதனை நடத்தும் ஒரு கை
கத்திதனை ஏந்தும் ஒரு கை
கழுத்தறுக்கத் துணியும் ஒரு கை
இன்றைக்குத் தனித்தனியாய்
இவ்வேலை நிகழ்வதாலே
இருக்கின்ற காவல் துறையாரும்
இவரையெல்லாம் அடக்குகிறார்;
இல்லையேல் –
வகைவகையாய் முளைத்திருக்கும்
கைகள் எல்லாம்
கொலை கொலையாய் செய்துவிட்டுக்
கூத்தடிக்கும்
நாடு கொந்தளிக்கும்

– கலைஞர் மு. கருணாநிதி

## மரங்கள்

அன்று
'வீட்டுக்கு
ஒரு வீரன்
தேவை'
என்றார்கள்
வீரர்களை
வளர்த்தோம்
இன்று –
'வீட்டுக்கு
ஒரு மரம்
வளர்ப்பீர்'
என்கிறார்கள்.....
மரங்கள்
வளர்கின்றன.

– கவிஞர் காசி ஆனந்தன்

## நோக்கம் !

சொந்தத்திற் கார்
கொழும்பில் காணி
சோக்கான வீடு
வயல் கேணி
இந்தளவும் கொண்டுவரின்
இக்கணமே
வாணியின் பாற்
சிந்தை இழப்பான்
தண்டபாணி !

– மஹாகவியின் குறும்பா

## தவறியது !

ஒரு பெரிய கூட்டத்தில்
உன்னையும்
உன்னிடம் என்னையும்
கைநழுவ விட்டேன்
இன்றுவரை எனக்குக்
கிட்டவில்லை,
நீயும்
நானும்

– கவிஞர் இரா. சரவணமுத்து

## பிரகடனம்

நான்
வேர்வைக்குப் பூச்சூட்டும்
விவசாயி
ஏழையரின்
கண்ணீரின் தலையெழுத்தை
என்
கையெழுத்தால் துடைக்கிறவன் !

– கவிஞர் மு. மேத்தா



### மாதமிரு திருக்குறள் கற்போம் !

### குற்றங்கடிதல்

" பற்றுள்ள மென்னு மிவறன்மை பெற்றுள்ளு
மெண்ணப் படுவதொன் றன்று " (குறள் 438)

செல்வத்தைச் செலவிட வேண்டியவற்றில் செலவிடாது, அதில் அதிக ஆசைவைக்கும் கருமித்தனம், குற்றங்கள் எதனுள்ளும் உடன் வைத்து எண்ணக்கூடியதன்று. குற்றத்தில் பெரிய குற்றம் அது.

" வியவற்க வெஞ்ஞான்றுந் தன்னை நயவற்க
நன்றி பயவா வினை " (குறள் 439)

ஒருவன் எத்துணை உயர்ந்தாலும், எப்பொழுதும் தன்னைத் தானே வியந்து பெரிது படுத்திப் பேசாதிருப்பானாக. மிக உயர்ந்த நிலைகளையடைந்தாலும், தன்னை மிகப் பெரிதாக மதித்துக் கொள்ளாமலும், அந்நினைவின் செருக்கினால் நன்மை பயவாத செயல்களைச் செய்துவிடாமலும் ஒருவன் அடக்கமாய் இருக்கவேண்டும்.

வாரி என்பது கடலின் மறுபெயர்

வாரி வழங்கிய கடலும்

வாரிச் சுருட்டிக் கொண்டு போன சுனாமியும்

அட்டைப்படத்தில் சங்கமித்திருக்கின்றன

இனி கடல் கண்டு

ரசிப்பதா, அஞ்சுவதா ?



லண்டனில் தனது இல்லறத்தில் இனிமையான 25ஆம் வருட நினைவை 8.02.2005இல் கொண்டாடி மகிழும் நாக கெங்காதரன் - ஜெயகௌரி தம்பதிகளுக்கு தமிழர் தகவலின் இதயம் கனிந்த வாழ்த்துக்கள்.

விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால் என் இதயத்தில் அமர்ந்தி நிற்கும் கெங்காதரன் தெல்லிப்பழை மகாஜன கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் நீண்ட நாள் செயலாளரும், சமூகவியலாளரும், தமிழ் ஈழத்தில் உருவாகி வரும் விளையாட்டுக் கல்லூரியின் காரணகர்த்தாவுமாவார். அவர் வழியில் அவர் பணி சிறக்கவும், மேலும் வளரவும் வாழ்த்துகிறோம்.


# MARKANDAN & SHARMA
## SOLICITORS & COMMISSIONORS FOR OATHS

**CONVEYANCING SPECIALIST**

Fast, Efficient and Friendly services in
- ✓ Residential Conveyancing
- ✓ Commercial Conveyancing
- ✓ Re - Mortgages
- ✓ Liquor Licenses
- ✓ Company Registration

**We Win No Fee Basis**
**Employment Law**
**Personal Injury**

**IMMIGRATION SPECIALIST**


Free Initial Consultation on all Immigration matters
- ✓ Immigration / Asylum
- ✓ Police station visits
- ✓ Overseas Work Permits
- ✓ Working Holiday Maker visa
- ✓ Entry Clearance Appeals
- ✓ Sponsor Letters
- ✓ Power of Attorney
- ✓ Translations / Unmarried Certificates

AFFORDABLE RATES ! We are Open on Saturdays

BOW BUSINESS CENTRE 153-159 BOW ROAD LONDON E3 2SE
TEL : 020 8981 5330 FAX : 020 8981 5350 MOBILE : 07956386576
Email : markandan@mssolicitors.com


LinkAIR
Travels Limited
ATOL 5047 PROTECTED
IATA
91-2 5704 0
SriLankan
Special Fares to : Colombo, Madras, Singapore, Canada
We can also arrange : COLOMBO - JAFFNA - COLOMBO
361 London Road, Croydon, Surrey CRO 3PB
Tel : 020 8665 0206 Fax : 020 8669 8579


இலண்டன் மாநகரில்
Galaxy News
உங்களுக்குத் தேவையான விரும்பிய
நூல்களை ஓடருக்கு
உங்கள் வீட்டுக்கு அருகாமையில் உள்ள தமிழ்க்
கடைகளில் பெற்றுக் கொள்ளலாம்
தொடர்புகளுக்கு
Mr. K. Alagan
GALAXY NEWS
84, Brooks Croft Road
London E17 4JR
Tel : 07958 360 176
Fax : 020 8527 2324


MEERA GOLD SMITH
Gems & Jewellery
896 Garratt Lane, Tooting, London SW17 0NB
Tel : 020 8767 2616 Mob : 07958 948 685
www.meera_jewellery.com
பழைய தங்கத்தில் புத்தம் புதிய நகைகள்
செய்து கொள்ள அதிநவீன நவரத்தின
கற்களை நியாய விலையில் பெற்றுக்கொள்ள
உங்களுக்குத் தேவையான 22ct சிங்கப்பூர்
நகைகளை நியாய விலையில்
உடனுக்குடன் பெற்றுக்கொள்ள
MEERA GOLD SMITH
MEERA GOLD SMITH
பிரமாண்ட காட்சியறை இல்லை ஆனால்
பிரமிக்க வைக்கும் கலைவண்ணம் வடிக்கும்
நகைச்சிற்பிகளின் கலைக்கூடம்

# இராசீவ் கொலை வழக்கு : இன்னும் முடியவில்லை?

**– சுப. வீரபாண்டியன்**

இராசீவ் காந்தி கொலைவழக்கில் புதிய திருப்பம் ஏற்பட்டுள்ளது. வெளிநாடு செல்லவிருந்த சந்திராசாமியைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று நீதிமன்றத்தில் மனுச் செய்த மத்திய குற்றப் புலனாய்வுத் துறை (சி.பி.ஐ) அவருக்கு இராசீவ் கொலையில் தொடர்பு உள்ளமைக்கான சான்றுகள் இருப்பதாகத் தன் மனுவில் குறிப்பிட்டுள்ளது.

ஆக, இராசீவ் கொலை வழக்கு விசாரணை இன்னமும் முற்றாக முடியவில்லை என்பதையும், அதில் தொடர்புள்ளவர்கள் பலர் வெளியில் சுதந்திரமாக உலவிக் கொண்டுள்ளனர் என்பதையும் புலனாய்வுத் துறையின் மனு வெளிப்படுத்துகின்றது.

இந்த உண்மையை ஆறு ஆண்டுகளுக்கு முன்பே நாம் வெளிப்படுத்தினோம். ' 26 தமிழர் உயிர்காப்பு வழக்கு நிதிக்குழுவின் ' சார்பில் மே 1998இல், தோழர் விடுதலை இராசேந்திரன் எழுதியுள்ள ' இராசீவ் படுகொலை மறைக்கப்பட்ட உண்மைகள் ' என்னும் நூல் வெளியிடப்பட்டது. அந்நூலுக்கு முன்னுரை எழுதியுள்ள பழ. நெடுமாறன், " உண்மைக் குற்றவாளிகளை மறைக்கும் நோக்கத்தில்தான், தொடக்கத்திலிருந்தே எல்லாம் நடத்தப்பட்டன. தமிழீழத்தில் நடைபெற்றுவரும் விடுதலைப் போராட்டத்தின் தாக்கம் தமிழகத்தில் பரவவிடாமல் தடுக்கக் கூடிய கருவியாக இராசீவ்கொலை வழக்கைத் தில்லி பயன்படுத்தியது " என்று குறிப்பிட்டுள்ளார். அந்தக் கூற்று எவ்வளவு உண்மையானது என்பதையே இன்றைய நிகழ்வுகள் எடுத்துக் காட்டுகின்றன.

சந்திராசாமியைப் பற்றியப் பல செய்திகள் அந்நூலில் உள்ளன.

யார் அந்தச் சந்திராசாமி ?

– நரசிம்மராவ் ஆட்சியில் கொடிகட்டிப் பறந்தவர்.

– அன்றைய தலைமை அமைச்சர் சந்திரசேகருக்கு வழிகாட்டி

– அனைத்து நாடுகளின் ஆயுத வணிகரான ஆண்டன் கசோகியின் நெருங்கிய நண்பர்

– வி.பி. சிங் மகனுக்கு, செயின் கிட்ஸ் தீவில் உள்ள வங்கியில் இரகசியக் கணக்கு இருப்பதாகப் போலி ஆவணங்களை உருவாக்கியவர்.

– அந்நியச் செலவாணி வழக்கு உட்படப் பல வழக்குகளில் சிக்கியிருப்பவர்.

இப்படிப்பட்ட சந்திராசாமிக்கு, இராசீவ் கொலையில் தொடர்புகள் இருப்பதற்கான சான்றுகள், பலவற்றை வெளிப்படுத்தி, அவரை அவ்வழக்கில் விசாரிக்க வேண்டும் என்று அன்றைய அவுட்லுக் உள்ளிட்ட பல ஏடுகள் எழுதின.

ஆனால் நரசிம்மராவ் அரசாங்கம் என்ன செய்தது தெரியுமா ?

சந்திராசாமி, சுப்பிரமணிய சுவாமி ஆகியோருடன் வெளிநாட்டு உளவு நிறுவனங்கள் தொடர்பு கொண்டு பேசியபோது இடைமறித்துக் கேட்கப்பட்ட தகவல்கள் கொண்ட பல கோப்புகள் காணாமல் போய்விட்டதாக அறிவித்தது.

காணாமல் போனதாக அறிவிக்கப்பட்ட கோப்புகள், அவற்றுள் அடங்கியிருந்த முக்கியமான தகவல்கள் பற்றிய அனைத்து விவரங்களையும் விடுதலை இராசேந்திரன் தன் நூலில் முழுமையாக விளக்கியுள்ளார்.

இராசீவ் கொலை நடந்த அன்று, சந்திரா சாமியும், சுப்பிரமணிய சுவாமியும் எங்கே போனார்கள். என்னென்ன செய்தார்கள் என்பனவெல்லாம் அந்தப் கோப்புகளில் இருந்தன. கொலையாளிகளுக்குப் பணம் கொடுத்ததும் சந்திராசாமிதான் என்னும் செய்தியும் ' தொலைந்துபோன ' கோப்பில் இருந்தது.

இராசீவ் கொலை வழக்கில், சிறப்பு நீதிமன்றத்தில் தூக்குத் தண்டனை வழங்கப்பட்ட ரங்கநாத், செயின் விசாரணைக் குழு (ஜெயின் கமிஷன்) முன் அளித்த வாக்குமூலத்தில், " சந்திராசாமி, மார்கரெட் ஆல்வா, கருநாடகக் காங்கிரசுத் தலைவர் அசுவத் நாராயணா ஆகியோருடன் தனக்கு நெருக்கமான தொடர்பு உண்டு என்று சிவராசன் அடிக்கடி கூறுவார். பெங்களூரிலிருந்து தப்பிச் செல்லச் சந்திராசாமியிடமிருந்து தகவலை எதிர்பார்த்துக் கொண்டு இருப்பதாகவும், சந்திராசாமி தன்னை தில்லிக்கு அழைத்துப் போய், அங்கிருந்து வெளிநாடுகளுக்கு அனுப்பிவிடுவார் என்றும் சிவராசன் என்னிடம் கூறினார், " என்று கூறியுள்ளார்.

இவ்வளவு வலிமையான ஆதாரங்கள் இருந்தும், சந்திராசாமி, சுப்பிரமணிய சுவாமி போன்ற மோசடி ஆசாமிகளைப் புலனாய்வுத் துறை ஏன் இவ்வளவு காலம் விட்டு வைத்துள்ளது என்ற வினாக்கள் நம்மைக் குடைகின்றன.

இப்போதாவது புலனாய்வுத் துறையின் பார்வை சரியான திசையில் சென்றிருப்பது மகிழ்ச்சி தருகிறது.

என்னவோ தெரியவில்லை, " சாமி "களுக்கும், சிறைக் கம்பிகளுக்கும் ஒரு நெருக்கமான உறவு ஏற்பட்டு வருகிறது.

உச்சநீதி மன்றத்தினால் விடுதலை செய்யப் பட்டவர்களும் கூட எட்டு ஆண்டுகள் சிறைவாசம் முடிந்தே வெளியேறினர். இப்போது சிறையில் உள்ள எண்மரும், 13 ஆண்டுகளுக்கு மேலாக அங்கு உள்ளனர்.

இவ்வழக்கு, ' தடா ' சட்டத்தின் கீழ் வராது என்று உச்சநீதி மன்றமே கூறிய பின்னரும், ' தடா ' சட்ட விதிகளின் படியே, துன்புறுத்திப் பெறப்பட்ட அவர்களின் வாக்கு மூலங்களின் அடிப்படையில் அவர்கள் சிறைத் துன்பத்தைப் பெற்றுள்ளனர்.

சிறையில் எரிந்துபோன அவர்களின் வாழ்க்கை வசந்தங்களை இனி யாரால் திருப்பித் தரமுடியும் ?

எனவே இந்நிலைக்கு அவர்களை உள்ளாக்கிய, அன்றைய சிறப்புப் புலனாய்வுக் குழுத் தலைவர் கார்த்திகேயன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சிறையில் இருப்பவர்களை உடனடியாக விடுதலை செய்வதோடு, அவர்களுக்கும் ஏற்கனவே எட்டு ஆண்டுகள் சிறையில் இருந்தவர்களுக்கும் உரிய இழப்பீடு வழங்கவேண்டும்.

நன்றி : தென் ஆசியச் செய்தி

# அது என்ன ரகசியம் ?

தென்கச்சி சுவாமிநாதன்

ஓர் ஊரிலே ஒரு மன்னன் இருந்தான்.

கொடுங்கோல் மன்னன்.

அவன் மக்களுக்கு நிறையத் தொல்லை கொடுத்துக் கொண்டிருந்தான்.

அவன் ஒரு சமயம் என்ன செய்தான் தெரியுமா ?

ஒரு தவறும் செய்யாத ஒரு அப்பாவி இளைஞனைப் பிடித்துச் சிறையில் அடைத்தவிட்டான். அந்த இளைஞனின் உறவினர்கள் எல்லோரும் மன்னனிடம் சென்றார்கள். முறையிட்டார்கள்.

'' அரசே ... அவன் ஒரு தவறும் செய்யவில்லை. அவனைத் தயவு செய்து விடுதலை செய்யுங்கள் '' என்று கெஞ்சினார்கள்.

இந்த மன்னன் கொஞ்சம் யோசனை பண்ணினான். அப்புறம் அந்த இளைஞனைக் கொண்டுவரச் சொன்னான்.

அவனைக் கொண்டு வந்து நிறுத்தினார்கள்.

மன்னன் சொன்னான்.

'' இதோ பாருப்பா ... உன்னை நான் விடுதலை பண்ணுவேன். ஆனா ஒரு நிபந்தனை. அந்த நிபந்தனையை நிறைவேற்றினால் உனக்கு விடுதலை. ''

'' அப்படியே ஆகட்டும் மன்னா.. நிபந்தனை என்ன சொல்லுங்கள். ''

'' உன்கிட்டே ஒரு செம்மறி ஆட்டை ஒப்படைக்கப் போகிறேன். ஒரு மாசத்துக்குத் தேவையான தீனியையும் கொடுக்கப் போறேன். ''

'' ஒரு மாசம் கழிச்சு அந்த ஆட்டை எடை போட்டுப் பார்ப்பேன். அந்த ஆட்டின் எடை கொஞ்சம் கூடக் கூடியிருக்கக் கூடாது. எடை அதிகமாகி இருந்தால் உனக்கு விடுதலை கிடையாது என்ன சொல்றே ... ? ''

மன்னனின் நிபந்தனையைக் கேட்டதும் இளைஞன் குழம்பிப் போனான்.

எடை அதிகமாகாமல் பராமரிப்பது எப்படி ?

யோசித்தான். ஒன்றும் புரியவில்லை.

இது ஒன்றும் சரியாக வராது என்று தோன்றியது. நமக்கு விடுதலை இல்லை என்று தோன்றியது. பயந்து போனான்.

பரிதாபமாக மன்னனை நோக்கினான்.

அவன் பார்த்தான்.

'' சரி உனக்கு ஒரு நாள் அவகாசம் தருகிறேன். நன்றாக யோசித்துப் பார்... நாளைக்கு உன் முடிவைச் சொல். ''

இளைஞனும் சரி என்று தலையசைத்துவிட்டு வெளியே வந்தான். வழியில் ஒரு பெரியவர் நின்று கொண்டிருந்தார். அவரிடம் தன் நிலைமையைச் சொன்னான்.

பெரியவர் யோசித்தார். பிறகு அந்த இளைஞனை அருகில் அழைத்தார். அவன் காதோடு காதாக ஒரு வழியைச் சொல்லிக் கொடுத்தார்.

மறுநாள்...

மன்னன் முன்னால் வந்து நின்றான்.

'' அரசே.. உங்கள் நிபந்தனையை ஏற்றுக் கொள்கிறேன் '' என்றான்.

மன்னன் உடனே கையைத் தட்டி, '' யாரங்கே ? '' என்றான். அரண்மனைச் சேவகர்கள் வந்து நின்றார்கள். '' இந்த இளைஞனுக்கு ஒரு செம்மறி ஆட்டையும் அதற்கு ஒரு மாதத்துக்குத் தேவைப்படும் தீவனத்தையும் கொடுத்தனுப்புங்கள் '' என்று உத்தரவிட்டான்.

அதன்படியே பணியாளர்கள் கொண்டு வந்து கொடுத்தார்கள். தீவனத்தைப் பெற்றுக் கொண்டு ஆட்டுக் குட்டியை ஓட்டிக் கொண்டு வெளியேறினான்.

ஒரு மாதம் நாள் தவறாமல் ஆட்டுக்கு அந்த தீவனத்தைப் போட்டான்.

ஒரு மாதம் கழித்து அந்த ஆட்டை ஓட்டிக் கொண்டு அரண்மனைக்குப் போனான். மன்னன் அதை எடை போட்டுப் பார்த்தான். எடை அதிகரித்திருக்கவில்லை.

அப்படியேதான் இருந்தது.

உடனே போட்ட நிபந்தனைப்படி அந்த இளைஞனை விடுதலை செய்தான்.

மகிழ்ச்சியோடு வெளியே வந்தான் இளைஞன். அந்தப் பெரியவரைத் தேடிப் போனான். அவருக்கு நன்றி சொன்னான். அருமையான யோசனையைச் சொல்லிக் கொடுத்ததற்காக.

அது சரி... அவர் சொல்லிக் கொடுத்த யோசனை என்ன தெரியுமா ?

அது வேறு ஒன்றும் இல்லை. அந்த ஆட்டுக்கு எதிரில் அதன் கண்ணில் படுகிற மாதிரி ஒரு ஓநாயைக் கட்டிப் போடச் சொன்னார். அவ்வளவுதான்.

ஆட்டுக்கு ஓநாய் பிறவிப் பகை.

ஓநாயைப் பார்த்தாலே ஆடு நடுங்க ஆரம்பித்துவிடும்.

அவ்வளவு பயம்.

தினமும் அந்த ஆடு பயந்து கொண்டே தீனி சாப்பிட்டது. அதன் காரணமாக அதன் எடை அதிகரிக்கவில்லை.

அதுதான் ரகசியம் !

சரி.. இந்தக் கதை இப்போது எதற்கு ?

இளைஞர்களே ...

உடலும் மனமும் சரியாக இருக்க வேண்டுமானால் உணவு முக்கியம். சாப்பிடுகிற சமயத்தில் அமைதியாக இருக்க வேண்டும். அப்போதுதான் சாப்பிடுகிற சாப்பாடு உடம்பில் சேரும்.

அவசரத்திலேயும், பயத்திலேயும் சாப்பிடுகிற சாப்பாடு செரிக்காது.

எனவே உணவை உண்ணும்போது கவனமாக இருங்கள்.

அது உங்கள் வளர்ச்சிக்கு உதவும்.

இன்னொரு ராஜா இருந்தார்.

அவரும் ஒரு இளைஞனைச் சிறையில் அடைத்துவிட்டார். அவனை விடுவிக்க வேண்டுமாயின் அவரும் ஒரு நிபந்தனை போட்டார்.

என்ன நிபந்தனை தெரியுமா ?

'' ஒரு ஆட்டுக் குட்டியை உன் முன்னாடி கொண்டு வந்து நிறுத்துவேன். நீ அதுகிட்ட ஒரு கேள்வி கேக்கணும். அது அதுக்குச் சரியா பதிலை சொல்லணும். அப்படிச் செஞ்சிட்டா உனக்கு விடுதலை. ''

இளைஞன் யோசித்தான்.

'' சரி.. மகாராஜா '' என்று சம்மதித்தான். ஆட்டுக் குட்டியைக் கொண்டு வந்து நிறுத்தினார்கள். அவன் மெதுவாக அதன் அருகே போனான். அதன் காது ஓரமாகச் சத்தம் போட்டு... '' ஏப்ரலுக்கு அடுத்த மாதம் என்ன ? '' என்று கேட்டான்.

அது உடனே '' மே... '' என்று கத்தியது.

அவன் விடுதலையானான். ●

# வள்ளலார் வாழ்வு

தெருவில் போவோர் வருவோரையெல்லாம்...

அதோ போகிறது கழுதை, இதோ வருகிறது நாய் ... என்று வாய்க்கு வந்தபடியெல்லாம் சொல்லிக் கொண்டிருந்தான் ஒரு பித்தன்.

அந்த வழியே ராமலிங்க அடிகளார் என்ற வள்ளலார் வந்து கொண்டிருந்தார்.

அதைக் கண்ட சிலர் அவர் மீது அக்கறை கொண்டு, '' சுவாமி ! அந்தப் பக்கம் போகாதீங்க ... ! அங்கு இருக்கிற பித்தன் ஒருவன், போவோர் வருவோரை வாய்க்கு வந்தபடி பேசி திட்டிக் கொண்டிருக்கிறான்... '' உங்களையும் .... என்று சொல்லி தடுக்கப் பார்த்தனர்.

'' என்னை எப்படி வேண்டுமானாலும் திட்டட்டும்... '' அதைப் பற்றி எனக்குக் கவலையில்லை. ... எனமீது அக்கறை கொண்ட நீங்களும் கவலைப்பட வேண்டாம் என்று சொல்லிக் கொண்டு தொடர்ந்து நடந்தார்.

வள்ளலாரைப் பார்த்தவுடன் ....

'' இதோ வருகிறார் மனிதர் ... '' என்று சொன்ன பித்தன் திண்ணையில் இருந்து எழுந்து – நிர்வாணமாக ஓட ஆயத்தமானான். வள்ளலாரோ ! அவனுக்கு ஒரு துணியைக் கொடுத்து – உடுத்திக் கொண்டு போகும்படி செய்தார்.

அப்படிப்பட்ட வள்ளலார் ஒரு நாள் இரவு ... திருவொற்றியூரில் உள்ள கோவில் திண்ணையில் தூங்கிக் கொண்டிருந்தார்.

ஒருக்களித்துப் படுத்திருந்ததினால் .. ஒரு பக்க காதில் அணிந்திருந்த கடுக்கன் மின்னிக் கொண்டிருந்தது.

அவ்வழியே வந்த திருடனுக்கு ' அது ' பளிச்சென தெரிந்தது.

அக்கடுக்கனைக் கழற்றினான்.

அதை வள்ளலார் உணர்ந்தார். ஆனால் கத்தவோ, கதறவோ, எதிர்ப்புக் குரல் கொடுக்கவோ இல்லை... அமைதியாகயிருந்தார்.

நம்மை ஒருவன் – ஒரு கன்னத்தில் அறைந்தால் – மறு கன்னத்தையும் திருப்பிக் காட்ட வேண்டும் என்று இயேசுபிரான் சொன்னது போன்று ....

' ஒரு கடுக்கனை கழற்றிய திருடனுக்கு மறு கடுக்கனையும் கழற்றக் கொடுக்க வேண்டும் ' என்ற பாணியில் திரும்பி ஒருக்களித்துப் படுத்தார்.

' இயலாதவர்க்கு இயன்றதைச் செய்வோம் ' என்ற பாணியில் வள்ளலார் – அமைதியான முறையில் செயல்பட்ட விதம் .... திருடனின் மனத்தினை நெருடச் செய்தது...

'' சாதாரண மனிதனாயிருந்தால் இந்நேரம் ... திருடன்... திருடன் ... என்று கத்தி ஊரைக் கூட்டி... நம்மைப் பிடிக்கச் செய்து அடி உதைகளை கொடுக்கச் செய்திருப்பார்களே ... இவரோ ஒரு கடுக்கனுக்குப் பதிலாக இரு கடுக்கன்களையும் கழற்றிக் கொடுத்த தெய்வம்... ''

இத்தகைய தெய்வத்திடம் மன்னிப்புக் கேட்பதேயன்றி... வேறு வழியில்லை.... என்று மனம் திருந்தினான்.

'' சுவாமி ! வயிற்றுப் பிழைப்புக்காக வேண்டி... தெரியாம செய்து விட்டேன்... என்னை மன்னிச்சிடுங்க... ''என்று சொல்லி காலில் விழுந்தான்.

'' எழுந்திரு தம்பி ! நீ ஏன் மன்னிப்புக் கேட்க வேண்டும். பெண்ணாசை, பொன்னாசை, பொருளாசை – என்ற மூவாசைகளையும் வெறுத்த துறவிகளுக்கு பொன் ஆசை எதற்கு ? பொன் நகைக்குப் பதிலாக புன்னகை மட்டும்தானே தேவை என்பதனைப் புரியவைத்தவன் நீ... அதனால் இந்த கடுக்கன்களை நீயே எடுத்துக் கொள் ... '' '' என்றார் வள்ளலார்.

இருந்தவைகளையெல்லாம் அள்ளி அள்ளிக் கொடுத்த கர்ணன் கடைசியில், குண்டலங்களையும் கழற்றிக் கொடுத்ததுபோல ... வள்ளலார் கடுக்கன்களையும் கொடுத்தார்.

நியாயமான தேவைகள் பூர்த்தியாக வேண்டும் என்றால் என்னிடம் வா ... என்று திருடன திருந்துவதற்காக நயமாக எடுத்தும் சொன்னார். ... அருட்பெருஞ்ஜோதி தனிப் பெருங்கருணை கொண்ட வள்ளலார் ... !

*நன்றி : தினத்தந்தி*

# குறுகத் தரித்த குறள்

சுப. வீரபாண்டியன்

திருவள்ளுவரின் காலம் பரத்தமைப் பண்பாட்டை ஏற்றுக் கொண்டிருந்த காலம். சங்க இலக்கியங்களில் உள்ள பாடல்கள், குறிப்பாக மருதத்திணைப் பாடல்கள், அதற்குச் சான்றாக உள்ளன.

அப்பாடல்களுள் பரத்தையர் பற்றிய இகழ்ச்சிக் குறிப்புகள் சில காணப்படுகின்றன என்றாலும் பரத்தமை மறுப்பு ஒரு கோட்பாடாக எங்கும் உருப் பெறவில்லை.

வள்ளுவருக்குப் பிந்தைய கால இலக்கியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலையிலும் பரத்தமையொழுக்கம் காணப்படுகிறது.

கண்ணகியின் காற்சிலம்பை விற்கும் பொருட்டு, மதுரை மாநகர் வரும் கோவலன், கணிகையர் தெருக்களைக் கடந்தே வருகின்றான். கோவலன், மாதவிக்குப் பிறந்த குழந்தைக்குப் பெயர் சூட்டும் விழா நடைபெறும்போது, அங்கு அணிமேகலையார் ஆயிரவர் கூடி, மணிமேகலை எனப் பெயர் சூட்டியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த அணிமேகலையார் ஆயிரம் பேரும், மாதவியின் தாய் சித்ராபதியின் அழைப்பை ஏற்று வந்த தாசிகுலப் பெண்களாகத்தானே இருக்க முடியும்.

எனவே, வள்ளுவர் காலத்திற்கு முன்பும், பின்பும் தமிழர் இலக்கியங்களிலும், பண்பாட்டிலும் பரத்தையரிடம் ஆண்கள் சென்று வரும் பழக்கம் மறுக்கப்படவில்லை.

இச்சூழலில், வள்ளுவர் வரைவின் மகளிர் என்று தனி ஒரு அதிகாரம் அமைத்து, பரத்தமைப் பண்பாட்டைக் கடுமையாக மறுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

விலை கொடுப்பார் யாவர்க்கும் விற்பதல்லாது, அதற்கு ஆவார், ஆகாதார் என்னும் வரைவிலாத இயல்புடைய மகளிர் என்பதால், வரைவின் மகளிர் என்று அதிகாரம் பெயர் பெற்றதாகப் பரிமேலழகர் விளக்கம் தருவார்.

அம் மகளிரை வள்ளுவர் பொருட்பெண்டிர், இருமனப் பெண்டிர், மாய மகளிர் போன்ற கடுஞ்சொற்களால் சாடுகின்றார்.

பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம் இருட்டறையில்
ஏதில் பிணந்தழீஇ யற்று

என்னும் குறள், கடுமையின் உச்சத்தில் நிற்கின்றது.

பொய்ம்மையை உடைய பொருட்பெண்டிரைக் கூடிப் பெறும் இன்பம், இருட்டறையில் முன்பின் அறியாத பிணத்தினைத் தழுவிப் பெறும் இன்பம் போன்றதாகும் என்பது இக்குறளின் பொருள்.

பணம் கொடுத்துப் பெண்ணைத் தழுவும் ஆணும், பணத்திற்காக அவனைத் தழுவும் பெண்ணும் உண்மையில் யாரைத் தழுவுகின்றனர் தெரியுமா ? வள்ளுவர் சொல்கின்றார் – அவள் பணத்தைத் தழுவுகின்றாள், அவன் பிணத்தைத் தழுவுகின்றான்.

இதனினும் வலிமையாகச் சாட வேறு சொற்களில்லை என்றே கூற வேண்டும்.

எனினும், பரத்தமைப் பண்பாட்டில் ஈடுபடும் பெண்களைக் கண்டிக்கும் வள்ளுவர், அதே அளவுக்கு ஆண்களைக் கண்டிக்கவில்லை என்பது உண்மைதான்.

இன்றைய நிலையும் அவ்வாறுதான் உள்ளது. தவறான வழிகளில் ஈடுபடும் பெண்களைத்தான் சட்டம் தண்டிக்கிறது.

வண்டு வந்து தேன் குடித்தால்
மலருக்குத்தான் தண்டனை
வழுக்கி வழும் பெண்களுக்குச்
சட்டத்திலும் வஞ்சனை

என்று ஒரு திரைப்படப் பாடல் கூறும். விலைமகள், பொதுமகள், பரத்தை, தாசி என்று பெண்களை இழிவுபடுத்தும் சொற்கள் பல இருக்கின்றன. அவற்றிற்கு இணையாக ஒரு ஆண்பால் சொல் கூட இல்லை.

பெண் விடுதலைச் சிந்தனையாளர்கள் இன்று, அப்பெண்களைப் பாலியல் தொழிலாளர்கள் என்றே அழைக்க வேண்டும் என்று கூறுகின்றனர்.

இவையெல்லாம் இக்காலச் சிந்தனைகள். இன்றைய நிலையிலும், முழுமையாக நடைமுறைக்கு வந்துவிடாத சிந்தனைகள். இவற்றை, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய, நிலவுடைமை ஆணாதிக்கச் சமூகத்தில் வாழ்ந்த வள்ளுவரிடம் பொருத்திப் பார்த்து அவரைக் குறை கூற முடியாது.

எந்த ஓர் இலக்கியம் பற்றிய ஆய்வும், அவ்விலக்கியம் உருவான காலச் சூழலைப் பின்னணியாகக் கொண்டே ஆய்வு செய்யப்பட வேண்டும் என்பது நியதி.

அந்நியதிப்படி, பரத்தமையை எதிர்த்த முதல் தமிழ் நூல் என்னும் பெருமையை வள்ளுவம் பெறுகின்றது.

## லட்சுமி ஜுவலர்ஸ் வழங்கும் குறுக்கெழுத்துப் போட்டி

3-வது குறுக்கெழுத்துப் போட்டியில் பரிசு பெற்றவர்

**மு. சுசீலா**
3H ASTINGS ROAD
WEST EALING
LONDON
W - 13 8QY

இவருக்கு £ 25 காண பணம்
**லண்டன் லட்சுமி ஜுவலர்ஸ்**
நிறுவனத்தாரால் அனுப்பி வைக்கப்படும்

### குறுக்கெழுத்துப் போட்டி விடை

| | | | | |
|---|---|---|---|---|
| மா | வீ | ர | ர் | ல |
| ந | ண | ப | ன் | ப |
| க | ரி | கா | ல | ன் |
| ர | சி | கை | க | ல் |
| ம் | வ | ளு | ள் | வ |


**LAKSHMI JEWELLERS**
**276 High Street North**
**EASTHAM E12 6SA**
**Tel : 020 8470 5600**
**Fax : 020 8470 3448**


### குறுக்கெழுத்துப் போட்டி (5)

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | | நொ | | 2 |
| | ய | 3 | | 4 |
| | 5 | | | பி |
| 6<br>வ | | | 7 | |
| | | 8 | னா | |

<u>இடமிருந்து வலம்</u>
5. வாழ்க்கைத் துணைவி (3)
6. வரவேற்பதற்கும் இது பயன்படும் (3)
8. டிசம்பர் 26 (3)

<u>வலமிருந்து இடம்</u>
2. ஈழத்தின் ஊர்களின் ஒன்று(5)
4. அயலான் (5)
8. விளக்கில் எரிவது (3)

<u>மேலிருந்து கீழ்</u>
1. பெரியவர்களுடன் ஒப்பிடும் போது, இவர்.................. (5)
3. மறக்க முடியாதது (3)
4. இந்த அம்மன் தொடர்பாகத் தமிழில் ஓர் அந்தாதி இலக்கியமே உள்ளது (4)
7. சிலருக்கும் பகலிலும் வரும் (2)

<u>கீழிருந்து மேல்</u>
7. பாவலன் (2)

முதலில் வந்து சேரும் சரியான விடைக்கு £ 25 பவுண் பரிசாக அனுப்பி வைக்கப்படும்
உங்கள் விடைகளைத் ***தமிழர் தகவல்***
முகவரிக்கு அனுப்பி வைக்கவும்

# கணிதவியலாளன்

ஆங்கிலமூலம் : அழகு சுப்பிரமணியம்

தமிழில் : ராஜசிறீகாந்தன்

பால் போல நிலவு காய்ந்து கொண்டிருந்தது. பட்டினத்து மக்கள் முற்றவெளியில் மெதுவாக ஒயிலாக ஊர்ந்து கொண்டு அதனை அனுபவித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களிடையே புதுமணத் தம்பதிகளிருவரும் இருந்தனர். மனைவிக்கு அரையடி முன்பாகக் கணவன் நடந்து கொண்டிருந்தான். அவர்கள் படித்தவர்கள், நாகரிகம் தெரிந்தவர்கள். இதனால் இந்த அரையடி வித்தியாசம் தவிர்க்க முடியாததாக இருந்தது.

சந்திரம் பாடசாலையொன்றில் உயர்வகுப்பு மாணவர்களுக்குக் கணிதம் கற்பித்து வந்தார். பல்கலைக் கழகமொன்றில் கணிதவியல் பேராசிரியராவதற்கான தகுதி அவருக்கிருந்தது. அதுவே அவரது இலட்சியமும் கூட.

சுபத்திரா சிந்தனையில் ஆழ்ந்து விட்டாள். முக்கியமான சம்பவமொன்றை அவள் நினைவு கூர்வதாகத் தெரிந்தது.

" என்ன சிந்தனை பலமாக இருக்கிறதே ? " சந்திரம் கேட்டார்.

" வேம்படிப் பாடசாலையில் நான் படித்த நாட்களை நினைவு கூர்கிறேன். அதோ அந்தச் சுவர்களுக்கு மேலாக உயர்ந்திருக்கும் கட்டிடங்கள் உங்களுக்குத் தெரிகிறதா ? "

" ஆம் தெரிகிறது. "

" அங்குதான் நான் படித்தேன். "

" ஓ ! இப்போது ஞாபகம் வருகிறது. திருமணப் பேச்சின் போது நீ ஒரு படித்த பெண்ணென்று எனது பெற்றோர்கள் சொல்லியிருந்தார்கள். கனக்கப் படித்திருக்கிறாயா ? "

" மூன்றாம் பாரம் வரையில் படித்திருக்கிறேன். கனிஷ்ட கேம்பிறிச் பரீட்சையில் சித்தி பெற வேண்டும் என்று விரும்பி இருந்தேன். ஆனால் அதற்கிடையில் நமது திருமணம் முடிந்து விட்டதே. "

" இது உனக்கு ஏமாற்றமளித்திருக்கும். இல்லையா ! "

" இல்லையில்லை " அவள் சிரித்தாள். நிலவொளியில் பற்கள் பிரகாசித்தன.

" முத்துப் பல்லழகியே நீ கணிதமும் படித்திருக்கிறாயா ? "

" அட்சரகணிதமும் கேத்திர கணிதமும் செய்திருக்கிறேன். "

" நல்லது. சமாந்தர வரைகளுக்கு வரைவிலக்கணம் கூறு பார்க்கலாம். "

" எவ்வளவு தூரம் நீட்டினாலும் ஒன்றையொன்று சந்திக்காத வரைகளே சமாந்தர வகைகள். "

" நீ சொல்வது முற்றிலும் சரியல்ல. ஆரம்பக் கணிதம் மட்டுமே அறிந்த ஒருவர் கூறும் வரைவிலக்கணத்தைத்தான் நீ கூறினாய். "

" நீங்கள் என்ன வரைவிலக்கணம் கூறுவீர்கள் ? சுபத்திரா கேட்டாள். "

" முடிவிலியில் சந்திக்கும் வரைகளே சமாந்தர வரைகள் எனப்படும். நான் ஓர் உயர்தர கணிதசாஸ்திரி என்பதை நீ அறிந்து கொள் ", சந்திரம் அமைதியாகக் கூறினார்.

" நீங்கள் நன்றாகப் படித்தவர். "

" நீயும் படித்தவள்தானே ! ஆனால், அளவிற்கதிகமான படிப்பு ஒரு பெண்ணுக்கு அவசியம் என நான் எதிர்பார்க்கவில்லை. எனது படிப்பைப் பதியவைக்கும் அளவிற்கு உனது கல்வியறிவு உள்ளது. ஆனால், என்னுடைய உணர்வுகளுடன் ஒன்றிப்போவதற்கு உனது கல்வியறிவு போதாது. "

சுபத்திரா மெதுவாகச் சிரித்தாள். அவளுடைய முத்துப் பற்கள் மீண்டும் நிலவொளியில் பிரகாசித்தன. சந்திரம் மிகவும் திருப்தியுடன் வீடுநோக்கி நடந்தார். சுபத்திரா அவரைப் பின்தொடர்ந்தாள், அரையடி பின்னால்.

கடந்த சில வருடங்களாக மனைவியை விடக் கணிதத் துறையிலேயே அதிக கவனஞ் செலுத்தினார். அவருடைய இச்செயல் சுபத்திராவுக்கு எரிச்சலூட்டியது. ஆனால், தனது வெறுப்பைச் சொற்களிலோ, அல்லது செயலிலோ அவள் காட்டிக் கொள்ளவில்லை. ஒழுங்காக, சில வருட இடைவெளிகளில் குழந்தைகளைப் பெற்றாள். அவளை ஓர் இயந்திரமாகவே அவர் கருதினார்.

ஒரு கவிஞன் தனது கவிதைகளுக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொள்ளுகிறான் ஒரு பாடகன் தனது பாடல்களுக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொள்கிறான். அவர்கள் சாதாரண மனித உணர்ச்சிகளில், நடத்தைகளில் தவறியிருக்கலாம், இன்றேல் தோல்வியுற்றிருக்கலாம். ஆனால் அவர்களை நாம் அவர்களுடைய சொந்தத் துறைகளாகிய கவிதைத் துறையிலோ அல்லது இசைத் துறையிலோதான் கவனித்துப் பார்க்க வேண்டும்.

சந்திரம் ஒரு சாதாரண மனிதராகத் தென்படவில்லை. ஏனையோரிடமிருந்து முற்றிலும் வேறுபட்ட ஓர் அசாதாரணப் பிறவியாகவே காணப்பட்டார். அடிக்கடி நீண்டதூரம் நடப்பார். அப்போதெல்லாம் நண்பர்கள் யாரையாவது சந்தித்தீர்களா என்று மனைவி கேட்டால்,

" இல்லை. அவைகளில் எனக்கு நாட்டமில்லை. நான் கணிதப் பிரதேசத்துக்குள் மட்டுமே அலைந்து கொண்டிருக்கிறேன் " என்று பதிலளிப்பார்.

அயலவர்களுடன் அடிக்கடி சச்சரவிடுவார். வேலையாட்களின் மேல் எரிந்து விழுவார். தனது குழந்தைகளிடம் கூட அன்பு செலுத்தாமல், அவர்களை ஒதுக்கிவிடுவார். நுண்கணிதத்தில் மிகச் சிக்கலான கணக்குகளை இலகுவாகத் தீர்த்துவிடும் அவரால் சாதாரண கடைக் கணக்குகளைத் தவறின்றிக் கூட்டிப் பார்க்க முடியவில்லை. என்றாவது ஒருநாள் தான் ஒரு நியூட்டனாகவோ அல்லது குறைந்த பட்சம்

ராமானுஜமாகவோ வந்தே தீருவதென்ற எண்ணம் அவருடைய மனத்தில் வேரூன்றியிருந்தது.

சுபத்திரா தனது சிநேகிதிகளிடம் கணவனைப் பற்றிப் பெருமையடித்துக் கொண்டாள். இப்போது அவள் சந்திரத்தை ஓரளவு புரிந்து கொண்டாள். அயலவர்களுடன் அவர் நடந்து கொள்ளும் முறைக்காகத் தனது வருத்தத்தைத் தெரிவித்தாள். ஒவ்வொரு தேவையையும் குறிப்பறிந்து பூர்த்தி செய்வதன் மூலம் அவருடைய வேலைகளை இலகுவாக்கினாள். குழந்தைகள் அவருக்குத் தொல்லை கொடுக்காதவாறு பார்த்துக் கொண்டாள்.

சந்திரத்தின் நடத்தைகள் மிக விசித்திரமாகக் காணப்பட்டன. ஒன்றிற்கொன்று பொருத்தமற்ற காற்சோடுகளை அணிந்து கொண்டு வெளியே செல்வார். நண்பர்களை வீட்டுக்கு வரவழைத்துவிட்டு, அந்நேரம் பார்த்து எங்காவது கிளம்பிவிடுவார். பலத்த மழை பெய்யும்போது கூட கலைந்த தலையுடன் நீண்ட தூரம் உலாவச் செல்வார். கணிதத் துறையில் கடுமையாக உழைத்தார். புதிய இலகுவான வழிமுறைகளைக் கண்டுபிடித்து அவற்றை மாணவர்களுக்குக் கற்பித்தார். கேத்திர கணிதத்தில் கணக்குகளின் சொல்லடுக்குகளைக் கண்டு கலங்கிவிடாது நன்றாக ஆழ்ந்து சிந்தித்து விடைகளைக் காணவேண்டுமென மாணவர்களிடம் கூறுவார். கணித மூலச் சமன்பாடுகளெல்லாம் எக்கணமும் அவருடைய நாநுனியிலும் விரல் நுனியிலுமிருக்கும்.

சந்திரம் தனது இலட்சியப் பாதையில் எந்தவொரு தடையினையும் சந்திக்கவில்லை. கணிதவியல் அகில உலகப் பரிசொன்றைத் தட்டிக் கொண்டதன் மூலம் பெரும் புகழையும், கொழும்புப் பல்கலைக் கழகத்தில் கணிதப் பேராசிரியர் பதவியையும் ஒருங்கே பெற்றுக் கொண்டார். பல்கலைக்கழகத்தின் பலதரப்பட்ட வாழ்க்கைமுறைகள் பேராசிரியர் சந்திரத்திற்குப் பொருத்தம் அற்றவையாகக் காணப்பட்டன. ஆசிரியர் குழாமிலுள்ள அனைவரும் தங்கள் பாடங்கள், பாடத்திட்டங்கள் தவிர்ந்த ஏனைய பல்வேறு துறைகளில் ஈடுபாடு கொண்டிருந்தார்கள். பேராசிரியர் சந்திரத்தின் சொந்த இடமான யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு எவ்வளவோ வேறுபட்டதாக இருந்தது. கொழும்பு வாழ்க்கை எவ்வளவோ சிக்கல்களை உள்ளடக்கியிருந்தது. மக்கள் பிறருடைய சொந்த விஷயங்களைப் பற்றிச் சிறிதுகூட அக்கறை காட்டுவதில்லை.

சந்திரம் ஏனைய பேராசிரியர்கள் மீது பொறாமை கொண்டார். சரித்திரப் பேராசிரியர் சுந்தரம், இசைக் கலைஞானம் பெற்றவராக இருந்தார். அவர் பல்கலைக்கழக விழாக்களுக்குத் தலைமை தாங்க அழைக்கப்பட்டார். கணிதவியல் விரிவுரையாளர் தத்துவப் பிரசங்கங்களை நிகழ்த்தினார். இதே போல, தத்துவப் பேராசிரியர் மங்களம், சிறந்த எழுத்தாளராகத் திகழ்ந்தார். இவருடைய தரமான சிந்தனைகளும், சிறப்பான சொற்பொழிவுகளும் நகர்வாழ் மக்களாலும், மாணவர்களாலும் விரும்பப்பட்டன. பேராசிரியர் மங்களம் சென்றவிடமெல்லாம் வரவேற்கப்பட்டார். புகழ்ந்து உரைக்கப்பட்டார்.

பேராசிரியர் சந்திரம் தன்னைத்தானே புகழ்ந்து கொள்வதில் வெற்றிபெற முடியவில்லை. கணிதத்துறையில் மட்டுமே அவர் திளைத்திருந்தார். ஆனால், தலைநகரிலோ அசல்களே அழிந்து போகும்படியான போலிகள் பல உலாவின. பல ரகப்பட்ட மனிதர்களும் தங்கள் குறுகிய வட்டங்களிலிருந்து வெளியே வந்து வாழ்க்கை அரங்கில் கலைத்துறையிலோ அல்லது அரசியல் துறையிலோ இன்றேல் இலக்கியத்துறையிலோ ஈடுபாடு காட்டினார்கள்.

பல்கலைக்கழகப் பேராசிரியர்க் குழாம் அவர்மீது விசேஷ அக்கறையேதும் காட்டவில்லை. அவர்கள் தனக்குரிய அந்தஸ்தை வழங்கவில்லை என்று பேராசிரியர் சந்திரம் கவலைப்பட்டார். தன்னை ஒரு மன்றத்தின் தலைவராகும்படியோ, அல்லது பதிவாளர் ஆகும்படியோ யாருமே கேட்கவில்லையே என்ற கவலை பேராசரியர் சந்திரத்தை வாட்டத்தொடங்கியது.

சந்திரத்தின் பார்வையில் சக பேராசிரியர்கள் நேர்மையற்ற பிறவிகளாகத் தோன்றினர். சிறந்தவொரு கணிதசாஸ்திரியென்பதைத் தவிர வேறு தகைமைகள் ஏதும் அவருக்கிருப்பதாக அவர்கள் கருதவில்லை. ஈருறுப்புச் சூத்திரம் போன்ற புதுவகையான சூத்திரமொன்றைக் கண்டுபிடித்துத் தனது மேதைத்துவத்தைப் புலப்படுத்தியதன்மூலம் அவர்களிடமிருந்து பயங்கலந்த பக்தியையும், மரியாதையையும் அவர் பெற்றுக் கொண்டார். தானொரு வெற்று ஜடமல்லவென்பதைத் தனது விசாலித்த கணித அறிவைக் கொண்டு அவர் மற்றைய பேராசிரியர்களுக்குப் புரியவைத்தார்.

அடுத்த சில வருடங்கள் பேராசிரியர் ஓய்வொழிச்சலின்றிக் காணப்பட்டார். புதிதாக எதையாவது கண்டுபிடிக்கவேண்டும் என்று கடும் முயற்சி செய்தார். ஆனால் கண்டுபிடிப்புகள் அவ்வளவு இலகுவானவையாக இருக்கவில்லை.

" எனது முன்னோர்கள் கணிதவியல் சூத்திரங்கள் எல்லாவற்றையும் கண்டுபிடித்துவிட்டார்கள். புதிதாகக் கண்டுபிடிப்பதற்கு எதுவுமே இல்லைபோல் தெரிகிறது " என்று பேராசிரியர் சந்திரம் தனது நண்பர் ஒருவரிடம் கூறினார்.

" பேராசிரியரோ, கரும்பலகையில் நீங்கள் சமன்பாடுகளைத் தீர்த்துக் கொண்டிருக்கும்போது, உலகம் உங்களுக்கு முன்னால் எவ்வளவோ தூரம் சென்றுவிடுகிறது. நீங்கள் வாழ்க்கையில் ஏன் சிரத்தைக் காட்டக்கூடாது ? அப்போதுதான் இப்படியொருவர் இருக்கிறார் என்பதை மக்கள் அறிந்துகொள்வர் " என்று நண்பர் கூறினார்.

" அப்படிச் சொல்லாதே. அப்படிச் சொல்லாதே. " சந்திரம் சத்தமிட்டார். நான் ஒரு மேதை. உனக்குத் தெரியுமா நான் ஒரு மேதை. கூறியவாறே நண்பரை முறைத்துப் பார்த்தார். பின்னர் ஒருவாறு தன்னைச் சமநிலைப்படுத்திக் கொண்டார். நண்பரை நோக்கி, " நீ கூறுவது சரியாக இருக்கலாம். இருவிதமான கவர்ச்சிகள் இருப்பதை நான் கூட உணருகிறேன். ஒன்று கணிதத்துறை, அடுத்தது பரந்து விரிந்த இந்த உலகு. என்னைப் பொறுத்தவரையில் கணிதத்துறையின் கவர்ச்சிதான் பலமானதாக இருக்கிறது " என்று கூறினார்.

பேராசிரியர் சந்திரம் பிற பேராசிரியர்களைப் போல மாணவர்களிடமிருந்து விலகியிருக்காமல் அவர்களுடன் ஒன்றிப் பழகினார். சிலபோது தன்னைப் பற்றி அல்லது தனது ஒரு டசின் பிள்ளைகளைப் பற்றி விகடங்கள் செய்வார். ஒருநாள் பலமான மழை பெய்தது. பல்கலைக்கழக விரிவுரை

மண்டப ஓடுகள் ஊறி ஒழுகின. அப்போது பேராசிரியர் '' விசேஷ வகுப்பில் சில மாணவர்கள்தான் இருக்கிறார்கள். இப்படியான நேரத்தில் அவர்களை எனது வீட்டிற்குக் கூட்டிச் சென்று பாடங்களைத் தொடரலாம். ஆனால் சுமார் நூறு மாணவர்கள் அடங்கிய உங்கள் வகுப்பை அப்படி அழைப்பது சாத்தியமில்லை. ஏற்கனவே எனது வீட்டில் இடைநிலை வகுப்பொன்று உள்ளது '' என்று தனது குடும்பத்தையே கேலி செய்தார்.

இன்னொரு விரிவுரையின்போது, '' எத்தனை வழிகளில் எனது மக்கட் பிரவாகத்திலிருந்து இரண்டு சிறுமிகளையும், இரண்டு பையன்களையும் வேறுபடுத்த முடியுமென்று யாராவது கூறுவீர்களா? '' என்று கேட்டார். பட்டதாரி மாணவர்கள் இயல்பாகவே அவருடன் ஒன்றி அவருடைய வேடிக்கைகளிற் கலந்து கொள்வார்கள். சில மாணவர்கள் எல்லை மீறிவிடுவதுண்டு.

பேராசிரியர் சந்திரம் தனது மாணவர்களுக்கு மிகச் சிறப்பாகக் கணித போதனையளித்திருந்தார். அடிக்கடி பரீட்சைகளும் நிகழ்த்துவார். பௌர்ணமி நாட்களில் மாணவர்களை அழைத்து அவர்களுடன் நிலவொளியில் நடந்துகொண்டே அடிப்படைச் சமன்பாடுகளை அலசி ஆராய்வார். பரீட்சைகளை அநேகமாக அவருடைய உதவியாளர்கள் தான் நடத்துவார்கள். ஒருமுறை அவரே பரீட்சையொன்றை நடத்தினார். எல்லா மாணவர்களும் அக்கறையுடன் விடை எழுதிக் கொண்டிருந்தார்கள். ஒரேயொரு மாணவன் மாத்திரம் விடைத்தாள்களை வெறுமையாக வைத்திருந்தான். அவன் கணித அறிவு அற்றவனாக இருக்க முடியாது. ஒன்றில் வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். அல்லது மண்டபத்தைவிட்டு வெளியேறிவிட வேண்டும். ஆனால் அவன் அப்படிச் செய்யவில்லை.

பேராசிரியர் சந்திரம் அவனைக் கவனித்துவிட்டார். மெதுவாக அந்த மாணவனை நோக்கிச் சென்றார். மிரண்ட மானைப்போல அவன் பயந்து கொண்டிருந்தான். அவனுடைய விடைத்தாளில் இரண்டு வரிகளைத் தவிர மீதி முழுவதும் வெறுமனே காணப்பட்டது. அவ்வாறிருந்தும் அந்தப் பட்டதாரி மாணவன் பேராசிரியர் தன்னை அணுகியபோது விடைத்தாள்களைக் கையால் மறைத்துக் கொண்டான். பேராசிரியர் அவனுடைய கைகளை விலக்கிவிட்டு விடைத்தாளை நோக்கினார். முதல் வரி தெரிந்தது.

'' பேராசிரியர் சந்திரம் + கணிதவியல் = முடிவிலி ''

சந்திரம் மகிழ்ச்சியுடன் சிரித்துக் கொண்டார். அடிமேலடி வைத்து மண்டபத்தை வளைய வளையச் சுற்றிவந்தார். மயிலின் கர்வத்துடன் மண்டப மேடைமீதேறினார். ஒருவித இன்பக் கிறுகிறுப்பு.

'' நியூட்டன், இராமானுஜம், சந்திரம். ''

சந்திரம், நியூட்டன், இராமானுஜம் பெயர்களைத் திரும்பத் திரும்ப வாய்விட்டு முணுமுணுத்தார்.

திடீரென்று ஏதோவொரு சிந்தனையுடன் மேடையில் இருந்து இறங்கி அந்த மாணவனை நோக்கி வந்தார். அவன் எழுதியிருந்த அடுத்த வரியைக் காட்டுமாறு கேட்டார். அவனுடைய முகம் வெளிறியது. விடைத்தாளை மடித்துவிட்டான். அப்படிச் செய்வது சரியல்லவெனக் கூறிய சந்திரம் அதனைத் தருமாறு கேட்டார். அவன் விடைத்தாளைக் கொடுத்தான். பேராசிரியர் வாசித்தார்.

'' பேராசிரியர் சந்திரம் – கணிதவியல் = பூஜ்யம் ''

சந்திரத்தின் முகம் இருளடைந்தது. மன உளைச்சலால் அவனைத் திட்டுவதற்குக் கூட முடியாத அளவிற்கு அந்த ஒரு வரி அவருடைய உள்ளத்தைத் தாக்கிவிட்டது. சகல சம்பத்துக்களையும் பறிகொடுத்த ஒரு மனிதனைப் போல அவ்விடத்தைவிட்டு அகன்றார். ஆரோக்கியமும், வலிமையும் பொருந்திய மக்கள் நிரம்பிய அறையில் தானொரு முடவனைப் போலிருப்பதாக அவர் உணர்வு கூறிற்று. தலைநகரத்துப் பல்கலைக்கழகம் அவரை இந்நிலைக்குக் குன்றச் செய்துவிட்டது.

பௌர்ணமி நிலவு பல்கலைக்கழகத்தையொட்டி அமைந்திருந்த வெளியில் வெள்ளை விரிப்பிட்டிருந்தது. சுபத்திரா முஸ்லிம் பெண்களின் உடையணிந்திருந்தாள். அங்கு உலவிக் கொண்டிருந்த மக்கள் பகற்பொழுதில் அணிவதுபோல கனமான ஆடைகள் அணிந்திருக்கவில்லை. லேசான உடைகளையே உடுத்தியிருந்தார்கள். சுபத்திரா கணவனுக்கு அரையடி பின்னால் நடந்துகொண்டிருந்தாள். சட்டையைத் தளர்த்திக் காற்றைப் புகவிட்டாள். இரவு நேரத்துக் குளிர்காற்று உடலுக்குச் சுகத்தை அளித்தது. திடீரென்று சந்திரம் அவளைக் கூப்பிட்டார்.

'' எங்கே இருக்கிறாய் ? ''

'' இங்கேதான் உங்களுக்குப் பின்னால் '' என்றாள்.

'' பேராசிரியர் சந்திரத்துடன் கணிதவியல் சேர்ந்தால் அதன் முடிவு என்னவாயிருக்கும். ''

சுபத்திரா திகைத்தாள். '' முடிவிலி '' என்ற சொல் அவளுக்குப் பரிட்சயமில்லை. அவளுடைய கணித அறிவு அவ்வளவு தூரம் விசாலித்திருக்கவில்லை. ஆனால் அவருடன் கணிதவியல் சேர்ந்தால் அளவிட்டுக் கூற முடியாத ஏதோவொன்று தோன்றுமென்று அவளுக்குத் தெரிந்திருந்தது. சுபத்திரா தனக்கு இயல்பான பாணியில் அதனை விவரித்தாள்.

'' அது இந்த உலகத்தையோ அல்லது சமுத்திரங்களையோ விடப் பெரியதொன்றாக இருக்கும். ''

'' ஓ ! மிகச் சிறப்பான விளக்கம் '' சந்திரம் பாராட்டினார். பிரியமிக்க பார்வையொன்றினால் அவளைத் தழுவிக் கொண்டார். அவள் தலைகுனிந்தாள். பொது இடங்களில் அடக்கமாக நடந்துகொள்ளவே சுபத்திரா விரும்பினாள். சந்திரம் அவளைச் சீண்டிக் குறும்பு செய்தார். அவளுடைய முகம் நாணத்தால் சிவந்தது.

'' என்ன, இன்றைக்கு இவர் புதுவிதமாக நடந்துகொள்கிறாரே '' என்று சுபத்திரா நினைத்தாள். ' ஓ ! இல்லையில்லை ! ' உடனடியாகத் தன்னைத் திருத்திக் கொண்டாள். ' அவர் ஒரு மேதை, அதனாற்றான்... '

'' சுபத்திரா ''

'' என்ன பேராசிரியரே ? ''

'' இப்போது சொல்லு பேராசிரியர் சந்திரத்திலிருந்து கணிதவியலைக் கழித்துவிட்டால் ? ''

'' சுலபமாய்ப் பதிலளிக்கலாம் ''. இதழுக்கிடையில் புன்னகை தவழ அவருடைய மனைவி கூறினாள்.

'' எனதன்பான பேராசிரியரே கணிதவியல் இல்லையென்றால் நீங்கள் ஒன்றுமேயில்லை. '' தனது பதிலால் திருப்தியடைந்து சந்திரம் தன்னைப் பாராட்டுவார் என்று அவள் எண்ணினாள். ஆனால், அவள் எதிர்பார்த்ததற்கு நேர்மாறாக தாக்கம் நிகழ்ந்தது. சந்திரத்தின் உடல் கோபத்தால் நடுங்கியது. வாய்க்கு வந்தபடி சுபத்திராவைத் திட்டினார். கைகளை வீசிக் கொண்டு அவளைத் தாக்குவதற்காகப் பாய்ந்தார்.

அங்கிருந்த சிலர் பேராசிரியரைச் சூழ்ந்து கொண்டார்கள். சந்திரத்திற்குப் பைத்தியம் பிடித்தவிட்டதாக ஒருவன் சொன்னான். மேதைகளின் மாறுபட்ட மன உளைச்சலால் ஏற்படும் தற்காலிக வெளிப்படுகளிலொன்றே இது என்றார்கள் சிலர். பேராசிரியர் சிவபெருமானின் ஊழி நடனத்தை ஆடிக் கொண்டிருக்கிறார் என்று சில இளவட்டங்கள் நையாண்டி செய்தன.

சிநேகிதி ஒருத்தி சுபத்திராவை இழுத்துக் கொண்டாள். சந்திரம் சுற்றியிருந்தவர்களை விலக்கிக் கொண்டு உபவேந்தரிடம் தனது இரண்டு கேள்விகளுக்கும் விடையளிக்குமாறு கேட்டுக் கொண்டார். அவர் கைகளையும், கால்களையும் வீசிக் கொண்டு புராணகாலக் கதாநாயகர்களின் அபிநயங்களுடன் நடந்து கொண்டவிதம் விநோதமாக இருந்தது. உபவேந்தர் பேராசிரியர் சந்திரத்தின் கேள்விகளுக்குப் பதிலளிக்கவில்லை. பயத்தினால் நாக்கு அண்ணத்துடன் ஒட்டிக் கொண்டது. சொற்கள் வெளிவர மறுத்தன. உபவேந்தரின் மனைவி வீறிட்டலறினாள்.

உபவேந்தர் ஒருவாறு தன்னைச் சுதாகரித்துக் கொண்டு, வேலைக்காரனை அழைத்தார். சந்திரத்தை வெளியேற்றுவதில் அவர்கள் பெருஞ்சிரமப்பட்டார்கள். இறுதியாக வேலையாட்கள் அவரைப் பலாத்காரமாகத் தூக்கிச் சென்று வாடகைக் காரொன்றில் ஏற்றினார்கள். உபவேந்தர் சாரதிக்கருகில் அமர்ந்துகொண்டார். நேரே மனநோயாளர் மருத்துவமனைக்குச் செல்லுமாறு சாரதியிடம் கூறினார். குளிர்ந்த நிலவொளியில் சுபத்திராவை அவளுடைய சிநேகிதிகள் வீட்டிற்கு அழைத்துச் செல்வது சந்திரத்துக்குத் தெரிந்தது. காது செவிடுபடக் கத்தினார்.

'' ஓ! சுபத்திரா, சுபத்திரா ! ''

'' நீர் இப்போது அவளைப் பார்க்க முடியாது! '' உபவேந்தர் கடுமையான குரலில் சந்திரத்தை எச்சரித்தார்.

'' மிகவுஞ் சரி. நான் அவளை முடிவிலியிற் சந்தித்துக் கொள்கிறேன் '' பேராசிரியர் அமைதியாக பதிலிறுத்தார். கருமுகில் ஒன்று நிலவை மறைத்தது. இருள் கவிந்து பாதையை மூடியது. இருளினால் வெகுண்டு வெறுப்படைந்த பேராசிரியர் ஆவேசம் கொண்டு துள்ளினார். சாரதி அசுரவேகத்தில் மனநோயாளர் வைத்தியசாலைக்குக் காரைச் செலுத்தினார்.

## கிறிஸ்துமஸ் விழாவில் காந்தி

1931 ஆம் ஆண்டு மகாத்மா காந்திஜி அவர்கள் வட்ட மேஜை மாநாட்டிற்காக லண்டன் சென்றுவிட்டு கப்பலில் திரும்பிக் கொண்டிருந்தார். பம்பாய் நோக்கி அந்தக் கப்பல் வந்து கொண்டிருந்தது. அன்று மறுநாள் கிறிஸ்துமஸ். கப்பலில் வந்து கொண்டிருந்தவர்களில் கிறிஸ்துவர்கள் இருந்தனர். அவர்கள் கிறிஸ்துமசைக் கொண்டாட வேண்டும். காலை சர்வீஸை நடத்துவது யார் ? பிரசங்கம் பண்ணுவது யார் என்று முடிவெடுக்க காந்தியிடம் வந்தனர். கிறிஸ்துமஸ் திருநாள் அன்று தாங்கள் பேச வேண்டும் எனக் காந்தியிடம் கோரினர். எந்த நேரத்தில் என்று கேட்டார் காந்தி. உங்களுக்கு சௌகரியமான நேரத்தில் என்றனர். காந்தி புன்னகையுடன் என்னுடைய தியான நேரம் காலை 4 மணி என்றார். அவர்கள் தயக்கத்தோடு அந்த நேரத்தில் கப்பலில் உள்ள அனைவரும் வரமாட்டார்களே என்று கூறினர்.

அதற்குக் காந்தி வரவேண்டியவர்கள் எப்படியும் வருவார்கள். தூங்க விரும்புபவர்கள் தூங்கட்டும் என்றார்.

மறுநாள் காலை நான்கு மணி கப்பலின் மேல் தளத்தில் அதிக கூட்டம். கப்பலிலுள்ள அனைவரும் அங்கிருந்தனர். காந்தியின் பிரசங்கம் தொடங்கியது.

கிறிஸ்து உலகிற்காகப் பிறந்தார். அவர் பிறந்த நாளினை விழாவாக மட்டும் கருதிவிடக் கூடாது. நமது வாழ்க்கையை அன்றாடம் ஒளிவீசச் செய்யும் நிலையான சம்பவம் என்று மனத்தில் கொள்ள வேண்டும். கிறிஸ்துவத்தில் நாம் அடையவேண்டியது இன்னமும் உண்டு. பூசல்களைத் தள்ளி வைத்துவிட்டு ஒருவர் மீது ஒருவர் அன்பு செலுத்தினால்தான் நமது வாழ்க்கை கிறிஸ்தவமாகும்.

காந்தியின் இந்தப் பேச்சு அத்தனை பேரின் நெஞ்சங்களையும் நெகிழ்த்த கிறிஸ்துமசைக் கொண்டாடினர்.

நன்றி: தினமணி

## தரிசனம் !

தமிழகத்தில் டிசம்பர் மாதத்தில் வழமையாக நடைபெறும் சங்கீத விழாக்களுக்கு இம்முறையும் குறைவில்லை. ஒரு சில சபாக்களில் மட்டுமே தமிழ்க் கீர்த்தனைகளையோ, பாட்டையோ கேட்க முடிகிறது. மற்றவையெல்லாம் புரியாத ஒரு மொழியில்தான் இடம்பெறுகின்றன. அதுதான் சங்கீதம் என்றும், சாகித்யமென்றும் சொல்லிக்கொள்கிறார்கள். தமிழில் பாடக்கூடிய இரண்டு பாடகிகள்தான் இப்போது தமிழகத்தில் உள்ளனர். அவர்களும் முற்றுமுழுதாகத் தமிழில் பாட அனுமதிக்கப் படுவதில்லை. அப்படிப் பாடினால் அவர்களுக்கு எதிர்காலத்தில் மேடை கிடைக்காத நிலையாகிவிடும். இதுதான் இன்றைய தமிழகம். அறுபது ஆண்டுகட்கு மேல் தன்மானப் பெரியார் ஈ.வே.ரா வாழ்ந்து சமூகப்பணி ஆற்றிய இடம். 37 ஆண்டுகளுக்கு மேல் திராவிடக் கட்சிகள் ஆட்சியில் உள்ள மண், இன்றும் அதே நிலையில்தான் உள்ளது. தமிழ் ஆட்சி மொழியாக இல்லை. தமிழ் பாடமொழியாக இல்லை. தனித்தமிழில் பேசினால் புரிந்துகொள்ள முடியாது திண்டாடுகிறார்கள். நீங்கள் ஈழத்தமிழரா ? என்று கேள்வி வருகிறது. அதில் சந்தோசப் பட்டிருந்தாலும் தாய் நாட்டின் நிலை எப்படியோ மனதைவாட்டத்தான் செய்கிறது. ஆயினும் இவர்களின் வரவேற்பில், அன்புகாட்டுவதில், விருந்தோம்பலில் அதுவும் வகைவகையாகச் சமைத்தளிப்பதில் எங்கள் மீது காட்டும் பாசம் அந்த அரவணைப்பு இன்முகம் இவற்றில் எவ்விதக்குறைகளும் இல்லை. நிறைவாகத்தான் நிற்கிறது.

சங்கீத சபாக்களின் தமிழ்ப் புறக்கணிப்பின் சலிப்புகளுக்கு முற்றுப்புள்ளியாக ஒரு புத்தகக் கண்காட்சியைக் காண முடிந்தது. அது 28வது சென்னைப் புத்தகக் கண்காட்சி. சனவரி 07 தொடக்கம். 17 வரை காயிதே மில்லத்து அரசினர் மகளிர் கலைக் கல்லூரியில் இடம் பெற்றது. பிரமாண்டமான இடவசதி. தரைவிரிப்புகளுடான நடைபாதை. இரண்டு பக்கமும் அடுக்கடுக்காக புத்தகங்களின் அழகான அடுக்குகள். விதவிதமான வர்ணங்களில் விளம்பரங்கள். பெயர்ப் பலகைகள். நுழைவாயிலில் இருந்தே எழுத்தாளர்களின் பெரிய புகைப்பட ஓவியங்கள், வரிசையாக நம்மை வரவேற்கின்றன. தமிழ் எழுத்தாளர்களின் தரம் உயர்ந்துள்ளதை அவை உணர்த்துகின்றன. கிட்டத்தட்ட 135 பிரசுர நிலையங்கள் வரிசையாக இலக்கமிட்டு தமது விற்பனை நிலையங்களை அமைத்திருந்தன. ஒவ்வொன்றின் முன்பும் அந்தந்த நிறுவனங்களின் பிரபலஸ்தர்கள், எழுத்தாளர்கள் நம்மை வரவேற்கிறார்கள். அது ஒரு மன நிறைவைத் தருகிறது. நுழைவுக் கட்டணமாக ரூபா.5.00 மாத்திரமே. அதுவும் 12 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு இலவச நுழைவுதான். எவ்வளவோ சிரமங்களுக்கு மத்தியிலும் இக்கண்காட்சி நடத்தப் பட்டவிதம் மிகச் சிறப்பாக அமைந்தது. ஒருநாள் நுழைவாயில் வலப்பக்கமாயின், மறுநாள் இடப்பக்கம் நுழைவாயிலாக மாற்றியிருந்தார்கள். இதுபற்றிக் கேட்டபோது; வருகின்ற நுகர்வோர் ஒரு பக்கமாகவே தொடர்ந்து வருவார்களாயின் மறு பக்கத்தில் இருந்து ஆரம்பிக்கும் நிலையங்கள் வருமானக் குறைவேற்பட அல்லது விற்பனை வீழ்ச்சியேற்பட வழியேற்பட்டுவிடுமே அதனால்தான் சமவாய்ப்பு ஏற்பட இப்படி ஒரு ஏற்பாடு என்றனர் ஏற்பாட்டாளர்கள். அதிலும் கூட ஒரு நுணுக்கமான கணிப்பு.

கணிணியின் ஆதிக்கம் ஏற்பட்டதால், வாசிப்பில் வீழ்ச்சியேற்பட்டுவிட்டதென்ற நம்முடைய மன ஆதங்கத்தை இங்கு போட்டி போட்டிக் கொண்டு புத்தகங்களை வாங்கியோர் பொய்ப்பித்துக் காட்டினார்கள். ஒவ்வொரு நிலையத்திலும் கூட்டம் அலைமோதியது. சில நிலையங்களில் உள்ளே நுழைவதே சிரமமாகத் தோன்றியது. குறிப்பிட்ட ஒரு புத்தக நிலையத்தில் '' கால்ஸ்மாக்ஸ் '' பற்றிய நூல் ஒன்றை வாங்குவதற்கு மூன்று முறை சிரமப்பட்டேன். இன்னொரு நிலையத்தில் '' வள்ளலார் '' பற்றிய நூல் ஒன்றை வாங்குவதற்கு முயன்றபோது, யாருடைய எழுத்தைத் தெரிவு செய்வது என்று திண்டாட வேண்டி வந்தது. அத்தனை ஆய்வுநூல்கள். அறிஞர்கள் பற்றிய எவ்வளவோ நூல்கள் என்னை அதிரவைத்தன. '' மெல்லத் தமிழ் இனிச்சாகும் '' என்ற மகாகவிஞரின் வேதனையான அந்த வரிகள் இனிப் பொய்த்துப்போகும் என்று ஆனந்தமான ஒரு எண்ணம் நிழலாடியது. '' தமிழில் எது இல்லை ? இல்லையென்று சொல்பவர்கள் ஒருமுறை தென்னிந்திய சைவசித்தாந்தக் கழகத்துக்குச் சென்று பார்த்துவிட்டு வந்து சொல்லட்டும் '' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒருமுறை எழுதியிருக்கிறார். இன்றும் அந்தக் கழகத்தின் விற்பனை நிலையம் இந்தக் கண்காட்சியில் களை கட்டிக் காட்சியளிப்பதைக் காணமுடிந்தது.

ஏறத்தாழ ஒரு கிலோமீற்றர் தூரத்தை எவ்வித களைப்புகளுமின்றிச் சுற்றிவர முடிந்தது. அவ்வளவு மனநிறைவு. இடைக்கிடையே பிரபலமிக்க எழுத்தாளர்கள், கவிஞர்கள், ஓவியர்களின் சந்திப்பு எம்மைப் பரவசப்படுத்தியது. உணர்வுமிக்க கவிஞரான அறிவுமதி, திராவிடத்தின் இன்றைய தலைமுறையின் பேராசிரியர் சுப. வீரபாண்டியன், எழுத்தாளர் மனுஷ்யபுத்ரன், பிரபல வானொலியாளர் மாலன், சொற்பொழிவாளர் நாகை முகுந்தன், மூத்த எழுத்தாளர் ஜெயகாந்தன், சுந்தர ராமசாமி, கலைஞரின் இலக்கிய வாரிசு கனிமொழி, இப்படி எத்தனையோ பிரபலத்தர்களை இந்தக் கண்காட்சியில் காண முடிந்தது. ஒவ்வொருநாள் மாலையிலும் ஒரு பிரபலஸ்தரின் பேச்சும், கேள்வி நேரமும் இடம்பெற்றன. ஒருநாள் நெல்லை கண்ணனின் பேச்சு, இன்னொரு நாள் ஜெயகாந்தனின் சொற்பொழிவு, மறுநாள் பேராசிரியர் குழந்தைசாமி இப்படி எத்தனையோ பேர். அத்தனையும் அற்புதமான பேச்சுகள். கேள்வி நேரங்களில் வாசகர்கள் காட்டிய ஆர்வம் பிரமிக்கத் தக்க விதத்தில் அமைந்திருந்தமை, 21ம் நூற்றாண்டில் வாசிப்போர் தொகை மாற்றமடையவில்லை என்பதை நிரூபித்தது. அரசியலுக்கு அப்பால் தமிழ்ச் சமூகம் மாற்றமடைந்திருக்கிறது என்பதை இக்கண்காட்சியின் நினைவுகள் இன்றும் மீட்டி நிற்கின்றன. இதை எழுதும்போது இதுவரை விற்பனையின் விபரங்கள் தெரிய வரவில்லை. எனினும் இது சென்ற வருடத்தைவிட முன்னோக்கியே நிற்கும் என்பது ஆய்வாளர் கருத்து. இந்தத் தரிசனம் என் சொந்த வாழ்வில் ஒரு பெரிய மாற்றமே. இந்த மாற்றத்தினூடே எனது சிந்தனைக்கு எட்டிய தமிழகத்தின் திருப்பு முனைகளின் பங்காளிகள் மூன்றுபேரைப் பற்றிய கணிப்பீடுகளை என்னால் பகிர்ந்துகொள்ளாமல் இருக்க முடியவில்லை.

இன்றைய தமிழ் சமூகத்தில் தாம் சார்ந்த துறையிலும், தம் சொந்த வாழ்விலும் வள்ளுவம் காட்டிய வழியில் ஒழுக்கத்தைப் போற்றுபவர்கள் இந்த மூவர்தான். தம் சொந்த வாழ்வில் ஏற்படுத்திக் கொண்டிருக்கும் சுயகட்டுப்பாட்டின் அடித்தளமே இவர்களை இப்படித் தைரியமாக செயற்பட வைத்திருக்கிறது. இவர்கள் தாம் சார்ந்துள்ள அமைப்புகளில் – அரசியல், சமூகம், ஆன்மிகம் என்பனவற்றில் தமிழகத்தின் விடிவுக்கு வழிகோலி வருகிறார்கள். இது ஒருவகைப் புரட்சி எனலாம். சினிமாவும், ஆங்கில மோகமும் அலைமோதும் சமூகத்தில் இவர்கள் பணி சிரமமானதுதான். எனினும் தம்

சொந்த வாழ்வின் தூய்மையால் இவர்களின் பணி வெற்றி பெறவேண்டுமென்பதும், தமிழினம் விடிவு பெற வேண்டுமென்பதும் எனது பேரவா என்பதால் இதை எழுத வேண்டியுள்ளது. ஏனெனில் தமிழ் வாழ்ந்தால்தான் தமிழன் வாழ்வான் என்ற எண்ணமே.

## அரசியல் :

தமிழகத்தின் அரசியல் இப்போது ஆடிக்காற்றில் அகப்பட்ட பஞ்சுபோல் பறக்கிறது. கொள்கையுடன், கறைபடியாத தலைமையைத் தக்க வைத்துக் கொண்டிருப்பவர் வை.கோ. அவரது தனிமனித ஒழுக்கம் விழுப்பம் தர வல்லது. பாராளுமன்றக் கதிரையில் அவர் இல்லை. ஆயினும் தன் மக்களுக்காக ஓடிஓடி உழைத்துக் கொண்டிருக்கிறார். பெரியார், அண்ணாவுக்குப் பிறகு காணாமல் போய்விட்ட திராவிட அரசியல் இவரால் மாத்திரமே மீட்சியடைய முடியும். அதற்கு உதாரணங்கள் அதிகம் உண்டு. எதிலும் துரிதமாக இயங்கும் வைகோ, சுனாமி என்ற ஆழிப்பேரலைகளின் அழிவின்போதும், ஈழத்து இழப்புகளின் போதும் செயற்பட்டவிதம் பலரை வியக்கவைத்தது. ஜெயேந்திரர் பிரச்சினையில் மிகப் பெரும் தலைகள் எல்லாம் தடுமாறும்போது, ஒரே சொல்லில் விடயத்தை விளக்கிவிட்டு மௌனமானார் வைகோ. இன்று வரை அந்த விளக்கம் மக்கள் மனதில் வீணான சந்தேகங்களை விலக்கிவிட்டுள்ளது. தமிழகத்துக்கு அண்ணாவுக்குப் பிறகு ஒரு எளிமையான தலைமை இனித்தேவை. மக்கள் மனத்துள் சந்தேகமற்ற ஒழுக்கம் கொண்ட ஒரே தலைமையாக வைகோ வளர்ச்சியடைகிறார். அவரது நடைப் பயணத்தின் வெற்றி அதற்கோர் உதாரணம். இலங்கை – இந்தியப் பாதுகாப்பு ஒப்பந்தம் நிறைவேறாமை, அடிக்கடி சோனியா காந்தியையும், மன்மோகன் சிங்கையும் சந்தித்து வரும் வேகம், தன் அரசியல் எதிரிகளைக் கூடக் கடுமையாக விமர்சிக்காத தன்மை, மக்களை அடிக்கடி சந்திக்கும் வழக்கம், மேடையில் மக்களை மயக்காமல், வார்த்தை ஜாலம் செய்யாமல் இலகு தமிழில் உணர்ச்சிபூர்வமாகப் பேசும் பாங்கு, இவற்றையெல்லாம் விட, தன் நிழலில் தொடரும் தொண்டர்கள் மேல் அவர்காட்டும் பரிவு, வாரிசுகளற்ற அவரது அரசியல் பாங்கு அவரது எதிரிகளைக்கூட வாயடைக்க வைத்திருக்கிறது. தனக்கு எதிரான தீர்ப்புக்குக் காரணமான நீதிபதியின் மறைவின்போதுகூட அவர் மனிதாபிமானத்துடன் நடந்து கொண்டு மற்றவர்களைக் கண்கலங்க வைத்தார். அண்ணாவின் கண்ணியத்தை அங்கே மக்கள் கண்டார்கள். தமிழினம் அதன் தலைமையை அவருக்கு அளித்தாலன்றி பெரியார் பட்டபாடுகள் தமிழகத்தில் விழலுக்கிறைத்த நீராகிவிடும் என்பது திண்ணம்.

## சமூகம் :

தமிழகத்தில் ஒரு புத்திசீவியான ஒழுக்கசீலர் பேராசிரியர் சுப. வீரபாண்டியன். ஆற்றொழுக்காகப் பேசும் இலக்கிய ஆய்வு வரலாற்றுத் தெளிவு. சுயமரியாதைக் கருத்துக்கள். எளிமையான வாழ்வு. எவருடனும் நட்புடன் பழகும் பண்பு. தான் சார்ந்த இயக்கத்துக்காவும், மக்களுக்காகவும், தன் பயனான நேரங்களையெல்லாம் பணியாக்கும் பண்பு, பெரியாரின் கொள்கைப் பிடிப்பு, எழுத்தாற்றல் இப்படி எத்தனையோ திறமைகளின் உறைவிடம். இளைய தலைமுறைக்கு இன்றியமையாத ஒரு உதாரணம். இன்று தமிழகத்தில் இளைஞர்களுக்கு ஏற்பட்டுவரும் மாற்றங்களுக்கு இவரும் ஒரு காரணகர்த்தா. இன்று சுயமரியாதையும், இலக்கிய ஆய்வும் கலந்த எந்தக் கூட்டமானாலும், அது சுப. வீரபாண்டியனுக்காகவே கூடுகின்ற கூட்டமாகிறது. அவ்வளவு தூரம் ஒரு மாற்றத்தை அலலது விழிப்பை அவர் இளைஞர்களிடையே ஏற்படுத்தி வருகிறார். திராவிடத்தின் பெயர் பொறித்த எந்த தலைவர்களுமே இப்படி இன்று சமூகப்பணியாற்றவில்லை. எவ்வித அரசியல் அபிலாசைகளுமின்றி சுழன்றுவரும் சுயமரியாதைத் தென்றல் அவர். ஈழத்து மக்கள் மேல் அசையாத அனுதாபங்கள் அவருடையவை. அன்று அண்ணா ஏற்படுத்தியதைப் போன்று இன்று இழந்துபோன கருத்துப் புரட்சிகளுக்கு அவர் உயிரூட்டி வருகிறார். மொழி, சாதி, சமயம் எனத் தமிழர்களின் பண்டைய – இன்றைய சமூக அமைப்புக்கு அவர் ஆற்றி வரும் ஆய்வுகளும், சொற்பொழிகளும் அற்புதமானவை. ஏழைகளுக்கும், பாமரர்களுக்கும் எளிய தமிழில் சுயமரியாதைக் கருத்துக்களையும், தமிழர் வரலாற்றின் உண்மைகளையும் ஊட்டிவரும் சுப. வீரபாண்டியன் அவர்களின் பணி, ஒரு காலத்தில் படித்தவர்களிடையே, பல்கலைக்கழக மாணவர்களிடையே பேராசிரியர் மு.வ கொண்டிருந்த ஈர்ப்பினையும் அவர் பெற்றிருந்த மதிப்பினையும் ஒப்பிட வைக்கிறது. இன்றைய தமிழினம் சமூக அமைப்புகளில் மாற்றமடையுமாயின், தெளிவு பெறுமாயின் அந்த விடிவின் பெரும் பங்காளியாக இப்பேராசிரியரே இருப்பார்.

## ஆன்மிகம் :

தமிழனை ஒருவகையில் தட்டிக் கேட்க வைப்பதானால் ஆன்மிகம் மிக முக்கியமாகிறது. எவ்வித எதிர்ப்புகளும் காழ்ப்புகளுமின்றி இதைச் செய்ய முடிந்தால் தற்போதைய சமூகத்தில் ஒரு மாற்றத்தைக் காணமுடியும். ஆண்டாண்டாக புராணங்களையும், இதிகாசங்களையும் கூறி வந்த ஆன்மிகப் பேச்சாளர்கள் புதிய தலைமுறையைக் கவரும் வகையில் கருத்துக்களை முன் வைக்கத் தவறிவிட்டனர். அதனால் ஆன்மிகம் ஒரு வட்டத்துக்குள்ளேயே நின்று கொண்டது. 21 ம் நூற்றாண்டுக்கான அறிவியலை அந்த ஆன்மிகத்தில் காண முடியாமை எவ்வளவு பேச்சாற்றல் இருப்பினும் இளைய சமூகத்தைக் கவர முடியாமல் விட்டுவிட்டமைதான் உண்மையாகிப் போனது. ஆன்மிகத்தில் அறிவியல் கண்டு அதை அழகாக மக்கள் முன் வைத்து, அந்த மக்களைத் தன் ஆற்றலால் கட்டி வைப்பதுமான ஒரு அற்புதம் தமிழகத்தில் நிகழ்கின்றது. ஒரு பிரபல அரசியல்வாதிக்குக் கூட கூடாத கூட்டம் இவரது கூட்டத்திற்கு அலைமோதுகிறது. சொற்கள் அழகாக, புதுமையாக வருகின்றன. ஆன்மிகத்துடன் அறிவியல் உணர வைக்கப்படுகிறது. இது இலகுவாக உணர்த்தவும் படுகிறது. இது ஒரு புதிய பரிமாணம். இதுவரை எவராலும் பரீட்சிக்கப்படாத அசைவுகள். பேசுவதிலும் நூற்றுக்கணக்கான வாழ்வியல் நூல்களை எழுதுவதிலும் வேகமாகச் செயற்படும் இவர் இன்றைய இளைய தலைமுறையின் சமயக் காவலர். அவரது வருகையின் பின் பல இளைஞர்கள் ஆன்மிகத்தை அறிவியலுடன் உணரத் தலைப்பட்டுள்ளமையைக் காணமுடிகிறது. அது ஒரு பெரிய வெற்றியின் அடையாளம் எனலாம். தமிழகத்தின் எதிர்காலம் வளம் பெற இவரது பணி அவசியமாகி வருகின்றது. இன்றைய நட்சத்திரப் பேச்சாளராக உயர்ந்து நிற்கிறார் சொல்வேந்தர் சுகிசிவம் அவர்கள். அவரது பணியில் தமிழகத்தில் ஒரு மாற்றம் ஏற்படுமென்று நம்புகிறோம். வள்ளலாரையும், திருமூலரையும் அவர்தான் மக்கள்முன் கொண்டுவருகிறார். அண்மைய சென்னைப் புத்தகக் கண்காட்சியில்கூட அவரது புத்தகங்களே இளைஞர்களிடமும், யுவதிகளிடமும் அதிகம் காணப்பட்டன. ஆன்மிகத்தின் தவறான வழிகாட்டலிலும், வன்முறையிலும் தடம் புரண்டு போகாமல் சமூகத்தைத் தடுக்கும் ஆளுமையைச் சுகிசிவம் கொண்டிருக்கிறார் என்பது மிகைப்படுத்தப்பட்ட கூற்றன்று.

– அரவிந்தன்

# வாழ்க்கைத் துணைநலம்

## வழிகாட்டும் ஒரு ஒளியகம்



புதிய உலகம், புதிய வாழ்வு முறை, புதிய நாகரீகம், புதிதான கல்விமுறை இப்படியான சூழ்நிலைகளினூடே எங்கெங்கெல்லாம் தமிழன் குடியேறி இருந்தாலும், கொடிகட்டிப் பறந்தாலும், அவனிடம் மாறாத ஒரு வழக்கம் மட்டும் வரலாறாகத் தொடர்கிறது. அதுதான் அவனது திருமண முறை. தன் வாழ்க்கைத் துணையை நாடும் வழியில் இன்றும் அன்றைய சம்பிரதாயங்களையும் சாத்திரங்களையும் அவனால் தவிர்த்துக் கொள்ள முடியவில்லை. ஆத்திகமோ, நாத்திகமோ, விஞ்ஞானமோ, தொழில் நுட்பமோ, மருத்துவமோ எந்தத் துறையில் இருந்தாலும், எவ்வளவுதான் சுயமாரியாதைக் கருத்துக்களைப் பேசினாலும் திருமணம் என்று வரும்போது அந்தப் பழைய நடைமுறைகள்தான் இன்றும் கோலோச்சுகின்றன. உலகின் எந்த இனமும் தன் வாழ்க்கைத் துணையைத் தேடும்போது இத்தனை விதிகளைத் தாண்டுவதில்லை. இறந்த காலமும், எதிர்காலமும் பற்றிய எண்ணங்களை நிகழ்காலத்துள் புடம் போட்டுப்பார்க்கின்ற ஒரு புனிதக் பயணத்தின் அத்திவாரமாகவே இந்த இணைப் பொருத்தங்கள் கணிக்கப்படுகின்றன.

பெண்மையை ஆண்மையும், ஆண்மையைப் பெண்மையும் புரிந்து கொள்வதுதான் தாம்பத்தியமென்றால் அத்தகைய ஏற்பாட்டினைத் தன் புனிதப்பணியாக ஏற்றுக்கொண்டு ஏற்றம் காட்டும் நிறுவனமொன்று, ஒரு தன்னலமற்ற மனிதரின் தனித்துவமான செயலாற்றலுடன் கொழும்பு நகரில் செயல்படுகின்றது. அங்கு நான் காலடி வைத்தபோது, ஒரு வேதபாடசாலையின் புனிதத்தைப் பார்க்க முடிந்தது. வித்தியாசமான, நவீன கணணிமயப்படுத்தலையும் காண முடிந்தது. அதற்கான அலுவலகம் குளிரூட்டப்பட்டு, அறையில் விரிப்புகளுடன் கூடிய அமைப்பு முறை, அடுக்கடுக்கான விபரக்கோவைகளைத் தாங்கிநிற்கும் அலுமினியப் பொருத்துதல்கள். அவற்றுள் விபரக்கோவைகள். அவைகளில் வேறுபாடான இலக்கங்களும், வர்ணங்களும். வயதுக்கேற்றதும் இருபாலார்க்கும் வேறுபாடானது மான கோவைகள் அவை. குறிப்பிட்ட வயதுக்கு – குறிப்பாக நிறங்கொண்ட கோவைகள். அவற்றுள் விபரங்கள் அடங்கிய படிவங்கள். அந்தப் படிவங்களுடன் இணைக்கப்பட்டிருக்கும் புகைப்படங்கள். கணிப்புகளை இணைப்பினில் துல்லியமாகக் காட்டும் கணணி முறை. எங்கெங்கோவென வெளிநாடுகளிலிருந்து வந்து கொண்டிருக்கும் ' ஈ ' மெயில் தொடர்புகள். வசதியான இருக்கைகள். இதமான சங்கீத வரவேற்பு. இப்படி உள்ள வசதிகள் என்னை அங்கு இருப்புக் கொள்ளச்செய்தன. நடந்து வந்ததில் வியர்வை தோய்ந்திருந்த உடல் குளிர்ந்துபோனது. அந்த நிறுவனத்தின் தலைவருடன் பேச முனைகிறேன். ஆயினும் அது சாத்தியமற்றதாகிவிட்டது. நானே ஏற்பாடின்றி – முன்னறிவிப்பின்றி வந்திருக்கிறவன். வழமையான ஏற்பாட்டின்படி வரவேண்டியவர்கள் வந்துகொண்டேயிருந்தார்கள். தொடர் தொடரான அந்த வருகைகளிலும் சந்திப்புகளிலும்தான் எத்தனை வித்தியாசமான பதிவுகள். தங்கள் குழந்தைகளின் திருமணம் பற்றிய ஏக்கத்துடன் பெற்றோர், தமது உடன்பிறப்புகளுக்காக வந்த சகோதர, சகோதரிகள், தாமாகவே துணையைத் தேடும் இளைய தலைமுறைகள், ஏற்கனவே விவாக விலக்குப் பெற்று மீண்டும் ஒரு இணையை தேடும் இளசுகள் – பழசுகள், தன் தனிமையைப் போக்க வரும் காலங்கடந்த தேடல்கள், மேலைத்தேய வாழ்க்கையில் தம்மை விரயமாக்கிக் கொண்ட சில வெற்று மனிதர்கள்; இப்படிப் பல இரசனைகளைக் கண்டதும் ஆவலாய் ஒரு பக்கத்தில் அமர்ந்து கொள்கிறேன். குளிர்மை தொடர்கிறது.

அனைவரையும் அமைதியாக வரவேற்கிறவர் திரு. வேல் அமுதன். அவர்தான் இந் நிறுவனத்தின் முதல்வர். என் நினைவுக்குத் தெரிந்த நாள் முதல் இலக்கியவாதியாகவும், ஒரு இலட்சியவாதியாகவுமே அவரைப் பார்த்திருக்கிறேன். இது அவரது புதிய பரிமாணம். இந்த திருமண ஆலோசனை அகம் எதையுமே வித்தியாசமாகவும், தனித்துவமாகவும் செய்து பழக்கப்பட்டவரான அமுதன் திருமண சேவையிலும் இதுவரை மற்றவர்களால் நடைமுறைப் படுத்தப்படாத, பழக்கத்தில் புதிதான, புதிய ஒழுங்குகளைக் கடைப்பிடிக்கிறார். இவரை நோக்கி வருகின்ற வாடிக்கையாளர்களை வெறுமனே திருப்திப்படுத்தும் நோக்கமின்றி விபரங்கள் அவர்களுக்கு வெளிப்படையாகவே விளக்கப்படுகின்றன. அதில் அனுதாபங்களுண்டு. அர்த்தங்கள் உண்டு. காரணங்களுண்டு. கடமையுணர்வுமுண்டு. எதுவும் எழுந்தமானதாக இயம்பப்படவில்லை. அங்கு வந்தவர்களுக்கு முதலில் உரிய படிவங்கள் வழங்கப்படுகின்றன. வெள்ளையான ஒரு படிவம், அது ஜாதகக் குறிப்புக்கானது. மஞ்சள் நிறமான படிவம், தங்கள் பொறுப்புக்கள், சிறப்பம்சங்கள், சம வாய்ப்புகள் என '' வேல் அமுதன் திருமண ஆலோசனையகத்தின் '' சட்ட திட்டங்களையும், அறிவுறுத்தல்களையும் காட்டுகிறது. இன்னொரு இளம் சிகப்புப் படிவம் திருமண ஒப்பேற்று ஒழுங்குமுறை என எப்படி இந்நிறுவனத்தில் தம் பெயரைப் பதிந்து கொள்ளல் எனச் சொல்கிறது. அதில் கட்டம் ஒன்று தொடக்கம் ஐந்து கட்டங்களுள்ளன. ஆலோசனை அகத்துக்கு வந்து பொருத்தமான ஜாதகக் குறிப்பினைக் கொடுத்தல், ஒப்பேற்று இலக்கத்தைப் பெற்றுக் கொள்ளல், இரு பகுதிப் பெற்றோரும் விசேட முன்னேற்பாட்டில் வருகைதந்து விபரங்களைத் தெரிந்து கொள்ளல், சீதனப் பொதியை அறிவித்தல், புகைப்படங்கள் பரிமாறுதல், மணமக்கள் சந்திக்கும் ஏற்பாடு என அப்படிவம் பல விபரங்களுடன் உள்ளது. அவற்றிற்கான கால அட்டவணைகளும் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த வழமைகள் இறுக்கமாகவும் இரகசியமாகவும் கடைப்பிடிக்கப்படுகின்றன. சோதிடப் பொருத்தம் கூட உடன் கணிக்கப்பட வசதியுண்டு. வந்தவர்கள் வியந்துபோகிறார்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து வரும் பெற்றோர், தமது வயது வந்த 7ல் செவ்வாய்க் குற்றமுள்ள பெண்ணுக்குரிய வரன் தேடி நிற்கிறார்கள். முறைப்படி விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டதும் இங்கு வழங்கும் நம்பிக்கையூட்டும் வார்த்தைகள் அவர்களுக்குத் தெம்பூட்டுகின்றன.

ஒரு ஆடவன், வயது நாற்பதைத் தாண்டியிருக்கும். தன் குடும்ப பாரத்திற்காக வாழ்ந்து இளமையை மறந்து போனவன். அவனுக்கான துணையொன்றை வேண்டி நிற்கிறான். அதுவும் அவன்போல உழைக்கும் பெண்ணாக, அவனுக்காக ஒரு ஜாதகம் அந்தக் கோவைகளினூடே இருந்து எடுக்கப்படுகிறது. எனினும் மறுதரப்பு ஒப்புதலின் பின் தொடர்புகொள்ள அறிவுறுத்தப்படுகிறான். அவனது விபரங்கள் அறிந்தபின் அந்த வயது எல்லைக்கான கோவையொன்று தயாராகின்றது.

வெளிநாட்டில் இருந்து ஒரு வாலிபன், தனக்கு ஏற்ற ஒரு மணமகள் தேடி; பட்டதாரியாக, ஆங்கிலம் தெரிந்தவளாக, வேலை செய்யும் விருப்பமுள்ளவளாக வேண்டுமாம். அவனுக்கு மனைவி வேண்டுமா அல்லது ஒரு வருமானத்துணை வேண்டுமா என்பதை தன் அடக்கமான – அர்த்தம் பொதிந்த கேள்விகளால் குடைந்தெடுக்கிறார் அமுதன். அதற்கேற்ப அவனுக்கு வேறொரு நாள் கொடுக்கப்படுகிறது.

ஜீன்ஸ் – ரீசேட் சகிதம் ஒரு பெண் வருகிறாள். படித்துப் பட்டம் பெற்றவள். வெளிநாட்டில் வேலை பார்ப்பவள். அவள் அழகாகவும் இருக்கிறாள். வெளிப்படையாகப் பேசுகிறாள். ' அஸெஸ்ட் ' பண்ணிக் கொண்டு தன்னுடன் குடும்பம் நடத்த ஒரு ஆடவனைத் தேடுகின்றாள். அப்படியானால் இவளால் ஏன் கணவனை அந்த வெளிநாட்டில் தேடிப்பிடிக்க முடியவில்லை. காதல், கலப்புத் திருமணம், மேல்நாட்டு உடை நடை எல்லாமே இருக்கும் சமூக அமைப்பில் நீண்ட நாட்கள் இருக்கும் இவளுக்கு ஏன் தன் துணையைத் தேட முடியாமற்போயிற்று. அவளுக்கான பதிலை அளித்து அனுப்பியபின் அமுதன் சொல்கிறார்: '' என்னதான் மாற்றங்களிடையே இவர்கள் வாழ்வு அமைந்திருந்தாலும் தன் கணவனைத் தானே தேடும் தயக்கமில்லாத தைரியமான பெண்ணானாலும் அவள் அடிமனத்துள் அந்தச் சம்பிரதாயங்களை உடைத்தெறியும் தைரியமில்லை. இதோ அவள் கொண்டுவந்திருக்கும் ஜாதகக் குறிப்பு '' என்கிறார். நான் அதிர்ச்சியடைந்துபோனேன். அந்த அதிர்ச்சியுடன் மேலும் தொடரும் இன்னொரு நிகழ்ச்சி. அது அடுத்த அழைப்பு.

ஒரு தாயும், மகளும். அவர்களும் வெளிநாட்டிலிருந்து வந்தவர்கள். வசதியான வாழ்வு வாழ்கிறார்கள். இங்கிருந்து ஒரு மாப்பிள்ளையை '' ஸ்பொன்சர் '' செய்து அழைத்துப் போகும் தகுதியுடையவர்கள். தன் மகளுக்கு அந்தத் தாய் நிறைந்த சீதனம் கொடுக்கவும் தயக்கமில்லை. பல கோவைகளை அமுதன் அலசுகிறார். அவர்களுக்குரிய திகதியொன்று கொடுக்கப்படுகிறது. நான் எனது இருக்கையில் இருந்து ஏறிட்டுப் பார்க்கிறேன். அவர் இதழோரத்தில் ஒரு புன்னகையுடன் ஆரம்பிக்கிறார்; '' இந்தத் தாய்க்குத் தன் மகளை ஒரு தகுதியானவனுக்குக் கட்டிக் கொடுக்கத்தான் ஆசை. அதுதான் தன் சொந்தநாட்டிற்கு வந்திருக்கிறார். '' அவர் முடிக்குமுன் நான் முந்திரிக் கொட்டையாகி, '' ஏன் அந்த நாட்டில் எத்தனையோ எமது இளைஞர்கள் உண்டே. இவர்களுக்குத் தெரியாமலா..... '' என்கின்றேன். அவர் தொடர்கிறார்; '' அதுவல்ல பிரச்சனை. அங்குள்ள நமது ஆட்களிடந்தான் இப்போது ' விவாகரத்து ' கலாச்சாரம் விமரிசையாக நடைபெறுகிறதே. இங்கு இருந்து தாய் தந்தையருடன் இணைந்து வாழ்ந்து வருகிறவன், ஒரு வேளை பாசத்துக்குக் கட்டுப்பட்டவனாக, கண்ணியமாக வளர்க்கப்பட்டவனாக இருப்பான். அதனால் தன் மகளுக்கும் தனக்கும் உண்மையாக இருப்பான், பாசத்துடன் நடந்துகொள்வான் என்ற எதிர்பார்ப்புதான் என்று மீண்டும் சிரிக்கிறார். உள ஆய்வின் அடிப்படையில் அவரது அணுகுமுறைகளைக் கண்டு வியப்படைகிறேன்.

இன்னொரு தந்தையும், மகனும் வருகின்றனர். ஒரு பட்டதாரிப்பெண் தேவையென்கின்றனர். அழகு வேண்டும். நிறம் வேண்டும். அவர்கள் எதிர்பார்ப்புப்படி வயது இருக்கவேண்டும் அத்துடன் சீதனமும் வேண்டும். இவற்றில் எதையும் விட்டுக் கொடுக்க அவர்கள் தயாரில்லை. அமுதன் அவர்களுக்கு அழகான விளக்கம் தருகிறார்; '' எதிர்பார்ப்புகள் அனைத்தும் ஒரு இடத்தில் குவிந்திருப்பதில்லை. அப்படி எல்லாம் நிறைந்திருந்தால், நீங்கள் கேட்காமல் மறந்த ' குணம் ' தேடவேண்டியதொன்றாகிவிடும். வாழ்க்கை மனங்களின் ஒன்று கூடலில் இருக்கிறது. அதில் ஏதாவது விட்டுக் கொடுப்பு இல்லையானால் நீங்கள் எதிர்பார்க்கும் இல்லறம் சாத்தியமானதுதானா ? '' அவரது அறிவுரையின் பின் அவர்களிடம் ஒரு மாற்றத்தைப் பார்க்கிறேன்.

இன்னொருவர், அவருக்கு ஐம்பதைத் தாண்டியிருக்கும். வெளிநாட்டு வாழ்வு. அவரது பேரக்குழந்தைகட்கு வரன் தேடும் வயதில் அவர் தேட வேண்டியுள்ளது. அதுவும் இரண்டு திருமண முறிவின்பின். எப்படியும் ஒரு பெண் வேண்டும். அது அவரது உடலுக்காகவா? உதவிக்காகவா? என நான் குழம்பிப் போகிறேன். விவாகரத்துப் பெற்ற பெண்ணைக்கூட அவர் ஏற்கத் தயார். ஆனால் அந்த வயதின் இணைவுக்கு இங்கு எப்படித் துணை தேடுவது? ஒழுங்குகளின்படி விபரம் பெற்றுவிட்டு விரைவில் விபரம் தெரிவிப்பதாகச் சொல்கிறார்.

இப்படி எத்தனையோ விதவிதமான அனுபவங்கள். அலுத்துக் கொள்ளாமல் ஆர்ப்பாட்டமின்றி விளம்பரம் செய்யாமல் இவரால் இத்தொழிலை எப்படி ' பிஸி'யாக வைத்துக் கொள்ள முடிகிறது ? இவரது அலுவலகத்தை நாடி ஆட்கள் வந்துகொண்டே இருக்கிறார்கள். வருபவர்களின் உண்மையான தேவைகளை உன்னிப்பாக உள ரீதியில் புரிந்து கொண்டு அவர் ஒப்புக் கொள்ளும் விதமே அந்த வெற்றிக்குக் காரணம். இருபக்க இணைப்பையும் நல் எண்ணத்தையும் ஏற்படுத்துவதுதான் இவர் பணி. வீணான சோடிப்புகள், காணாத வர்ணனைகளை வைத்துக் காரியம் சாதிக்கும் எண்ணம் துளிகூட இல்லை. இது ஒரு திருமண ஆலோசனை அகம் மாத்திரமன்று. அறவழியில் நெறிப்படுத்தும் தூய பணியுமாகும். உண்மைகள் மறைக்கப்படாத ஒரு உதவிக்கரத்தை இந்நிறுவனம் நீட்டி நிற்கிறது. ஏமாற்றத்துக்கு இடமற்ற இந்த இலட்சியச் செயற்பாட்டிற்கு ஏற்றுக் கொள்ளப்படும் கட்டணம் கூட ஒரு வரையறை கொண்டதாகவே உள்ளது. வேல் அமுதன் அவர்களின் அனுகுதலுடன் நிறைவேற்றப்படும் திருமணங்கள் ஒரு விளக்கமான புரிந்துணர்வின் பின்பே ஒப்பேற்றப்படுகின்றன. அவை ஒப்பேற்றப்படும் வரை, அவரது ஆய்வுகள், அறிவுரைகள், தேர்வுகள், தெளிவான வழிகாட்டல்கள் என்று, வேறு எந்த நிறுவனத்திடமுமில்லாத செயல்முறைகள் இங்கு காணப்படுதல் பாராட்டப்பட வேண்டியதாகும். நேர்மையான இத்தனி மனித வளர்ச்சி மேலும் விரிவடைய வாழ்த்துகிறோம்.

விபரம்:

VEL AMUTHAN MARRIAGE CONSULTANCY
8, 3 / 3 METRO APARTMENT
55th LANE, COLOMBO 06
SRILANKA TEL : 2360488
TEL / FAX : 4514396

– புனிதன்

# மாசி மாதப்பலன் ( பிப் 13 – மார்ச் 13 )

– கணித்தவர் : ஜோதிட ரத்னா – லயன். டாக்டர். கே.பி. வித்யாகரன்
37, மகாலக்ஷ்மி தெரு, தி.நகர், சென்னை – 17. தொலைபேசி : 2434 8877, 24336465 செல் : 94441 17 1115

## மேடம் : ( அஸ்வினி, பரணி, கிருத்திகை 1ம் பாதம் )



தெளிவாக தீர்க்கமாக சிந்தித்து நல்ல முடிவெடுப்பீர்கள். சிலர் உங்கள் மீது வீண்பழி சுமத்தினாலும் கவலைப்பட மாட்டீர்கள். சுக்ர பலம் நன்றாக இருப்பதால் கணவன், மனைவிக்குள் புரிந்து கொள்ளுதல் அதிகரிக்கும். ஆடை, ஆபரணம் சேரும். வீடு, மனை விற்பது, வாங்குவது சுலபமாக முடியும். பணம் எதிர்பார்த்த இடத்தில் கிடைக்கும். அரசால் ஆதாயம் உண்டு. பிள்ளைகளின் பிடிவாதம் குறையும். சகோதர வகையில் அலைச்சல், செலவு உண்டு. புது வியாபாரம் தொடங்குவீர்கள். பழைய பாக்கிகள் வசூலாகும். புது பங்குதாரர்கள் சேர்வார்கள். காதல் இனிக்கும். வழக்குகள் சாதகமாக முடியும். பழைய கடன் பிரச்சனையை எளிதாக சமாளிப்பீர்கள். கொஞ்சம் மன உளைச்சல், தூக்கமின்மை வந்து போகும். மாணவர்களின் மதிப்பெண் உயரும். கன்னிப் பெண்களின் கனவுகள் நனவாகும். உத்யோகத்தில் மேலதிகாரி ஒத்துழைப்பார். தோல்விகளிலிருந்து விடுபடும் மாதமிது.

| | | |
|---|---|---|
| சந்திராட்டம தினங்கள் | : | மார்ச் 2, 3, 4ந்தேதி காலை 9 மணி வரை கவனம் தேவை |
| இராசியான எண்கள் | : | 1, 5 |
| இராசியான நிறங்கள் | : | மெரூன், கிரே |

## இடபம் : ( கிருத்திகை 2, 3, 4ம் பாதம், ரோகினி, மிருகசீரிடம் 1, 2ம் பாதங்கள் )



சுக்ரபலம் சிறப்பாக இருப்பதால் நீண்ட நாள் திட்டங்களிலொன்று இப்போது நிறைவேறும். வீண் குழப்பம் விலகும். அரசால் அனுகூலம் உண்டு. புது நண்பர்கள் அறிமுகமாவார்கள். பண வரவு அதிகரிக்கும். செவ்வாய் எட்டில் நிற்பதால் அலைச்சலும், வீண்பழியும், உடன் பிறந்தவர்களால் உபாதைகளும், இரத்த அழுத்தம் அதிகரித்தலும் ஆகும். குடும்ப விவகாரங்களில் முன்கோபம் வேண்டாம். மனைவியின் உடல்நலம் பாதிக்கும். வாக்குவாதங்களும் வந்து போகும். குருவின் ஆதிக்கம் சிறப்பாக இருப்பதால் அடிமனதில் நம்பிக்கை பிறக்கும். பழைய கடன் தீரும். புதிதாக கடன் வாங்கி வியாபாரத்தைத் தொடங்குவீர்கள். ஏற்றுமதி, இறக்குமதி வகைகள் இலாபம் தரும். ஆடை, ஆபரணம் சேரும். புது வாகனம் வாங்குவீர்கள். உத்யோகத்தில் உங்களின் ஆதிக்கம் மேலோங்கும். புது வாய்ப்புகள் கிட்டும். மாணவர்கள் மகிழ்வார்கள். கன்னிப் பெண்களின் காதல் இனிக்கும். முன்கோபத்தைத் தவிர்த்தால் சாதிக்கும் மாதமிது.

| | | |
|---|---|---|
| சந்திராட்டமதினங்கள் | : | மார்ச் 4ஆம் தேதி காலை 9 மணி முதல் 5, 6 தேதிகளில் கவனம் தேவை. |
| இராசியான எண்கள் | : | 1, 6 |
| இராசியான நிறங்கள் | : | ரோஸ், வெள்ளை |

## மிதுனம் : ( மிருகசீரிடம் 3, 4ம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3ம் பாதங்கள்)



தடுமாற்றம் குழப்பம் நீங்கும். தரவேண்டிய பணத்தை தந்து முடிக்கும் அளவிற்கு பணவரவு அதிகரிக்கும். பிரபலங்களிடமிருந்து உதவி கிடைக்கும். குடும்பத்தில் நிலவிய பனிப்போர், வாக்குவாதம் விலகும். சுப நிகழ்ச்சிகளை முன்னின்று நடத்துவீர்கள். சகோதரி உதவுவார். புது நண்பர்களால் உற்சாகமடைவீர்கள். பிள்ளைகளிடமிருந்த பிடிவாத குணம் நீங்கும். கெட்டவர்களிடமிருந்து அவர்களை மீட்பீர்கள். உல்லாசப் பயணங்கள் சென்று வருவீர்கள். வீடு, வாகன வசதி பெருகும். சொத்துப் பத்திரங்களில், முக்கிய ஆவணங்களில் கையெழுத்திடும்போது கவனம் தேவை. வியாபாரத்தில் புது முடிவுகள் எடுப்பீர்கள். வேலையாட்களால் சிலசில பிரச்சனைகள் வந்து போகும். உணவு, மருந்து, இரும்பு வகைகள் கூடுதல் லாபம் தரும். உத்யோகத்தில் வேலைப்பளு குறையும். மாணவர்கள் பரிசு வாங்குவார்கள். கன்னிப் பெண்களுக்கு வேலை கிடைக்கும். வெற்றி பெறும் மாதமிது.

| | | |
|---|---|---|
| சந்திராட்டம தினங்கள் | : | மார்ச் 7, 8 தேதிகளில் நிதானம் தேவை |
| இராசியான எண்கள் | : | 5, 6 |
| இராசியான நிறங்கள் | : | கிளிப்பச்சை, பிங்க் |

## கடகம் : ( புனர்பூசம் 4ம் பாதம், பூசம், ஆயிலியம் )



சாண் ஏறினால் முழம் சறுக்கும். உதவி செய்யப் போய் உபத்திரவம் வந்து சேரும். எனவே மற்றவர்களின் விவகாரங்களில் அத்துமீறி தலையிடவேண்டாம். சூரிய பலம் நன்றாக இருப்பதால் தடைபட்ட காரியங்கள் உடனே முடியும். கணவன், மனைவிக்குள் நிலவிய சந்தேகம் தீரும். உறவினர்களின் நச்சரிப்பு இருக்கும். பிரபலங்களின் உதவிகள் உடனே கிடைக்கும். கௌரவப் பதவிகள் வந்து சேரும். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். அனாவசியச் செலவுகளை தவிர்க்க முடியாமல் தவிப்பீர்கள். அடுக்கடுக்காக பயணங்கள் வந்து சேரும். வியாபாரம் புதிதாக தொடங்குவீர்கள். புது முதலீடுகள் செய்வீர்கள். புது ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவீர்கள். உத்யோகத்தில் அதிகாரிகளின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். கன்னிப் பெண்களின் கல்வித்தடை நீங்கும். மாணவர்களின் மதிப்பெண் உயரும். குல தெய்வப் பிரார்த்தனைகள் நிறைவேறும். சூழ்ச்சிகளை வெல்லும் மாதமிது.

| | | |
|---|---|---|
| சந்திராட்டம தினங்கள் | : | மார்ச் 9, 10 தேதிகளில் கவனம் தேவை. |
| இராசியான எண்கள் | : | 6, 9 |
| இராசியான நிறங்கள் | : | சிவப்பு, வெள்ளை |

### சிம்மம் : (மகம், பூரம், உத்திரம் 1ம் பாதம்)



மாதத்தின் முற்பகுதி சற்றே மந்தமானதாகவும், அலைச்சல், செலவினங்கள், கவலைகள் தருவதாக இருந்தாலும் மத்தியப் பகுதியிலிருந்து நிம்மதி கிட்டும். பணவரவு அதிகரிக்கும். சகோதர வகையில் செலவுகள் அதிகரிக்கும். பெற்றோரின் உடல்நலம் பாதிக்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டு. வீடு, மனை விற்பதில் தடைகள், இடையூறுகள் வந்து போகும். மறைமுக எதிரிகளிடம் கவனமாக செயல் படுங்கள். அரசாங்கத்திடமிருந்து எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். வாகனச் செலவுகள் ஆரம்பத்தில் அதிகமாகி பின்பு குறையும். வேற்று மதத்தினர், மொழியினர் உதவுவார்கள். பேச்சில் அதிகாரம் தொனிக்கும். வரவேண்டிய பணம் வந்து சேரும். புது தொழில் தொடங்குவதில் நிதானம் தேவை. வியாபாரம் சூடு பிடிக்கும். பற்று வரவு உயரும். உத்யோகத்தில் உங்களின் கடின உழைப்பை மேலதிகாரி பாராட்டுவார். காதல் இனிக்கும். மாணவர்களின் மதிப்பெண்கள் கூடும். போராடி வெல்லும் மாதமிது.

| | |
|---|---|
| சந்திராட்டம தினங்கள் | : பிப்ரவரி 13 மற்றும் மார்ச் 11, 12 தேதிகளில் கவனம் தேவை. |
| இராசியான எண்கள் | : 1, 3 |
| இராசியான நிறங்கள் | : மெரூன் , ஊதா |

### கன்னி : ( உத்திரம் 2, 3, 4ம் பாதம், அஸ்தம், சித்திரை 1, 2ம் பாதங்கள் )



சூரிய பலம் உள்ளதால் தைரியமாக முடிவெடுப்பீர்கள். பழைய பிரச்சனைகள், சிக்கல்களுக்குத் தீர்வு கிடைக்கும். எதிரிகளை வீழ்த்துவீர்கள். சுக்ரபலம் குறைவாக இருப்பதால் கணவன் மனைவிக்குள் வாக்குவாதங்கள், சுபச் செலவுகள், உறவினர்களால் அலைச்சல், வாகனச் செலவு, வந்து போகும். உணவில் காரத்தைக் குறைக்கவும். அம்மாவின் உடல்நலம் பாதிக்கும். வீடு மாறுவீர்கள். ஷேர் லாபம் தரும். நண்பர்கள் உதவுவார்கள். சொந்த ஊரிலிருந்து நல்ல செய்தி வரும். அரசு காரியங்கள் உடனே முடியும். வெளிவட்டாரம் இனிக்கும். வியாபாரத்தில் புது முடிவுகள் எடுப்பீர்கள். புது ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவீர்கள். புது பங்குதாரர்கள் சேர்ப்பீர்கள். வியாபாரத்தை விரிவு படுத்துவீர்கள். உத்யோகம் நிம்மதி தரும். சக ஊழியர்களை அனுசரித்துப் போவது நல்லது. மாணவர்கள் கடுமையாக போராடி வெல்வார்கள். காதல் கசக்கும். ஓரளவு மகிழ்ச்சி தரும் மாதமிது.

| | |
|---|---|
| சந்திராட்டம தினங்கள் | : பிப்ரவரி 14, 15 மற்றும் மார்ச் 13 தேதிகளில் நிதானம் தேவை. |
| இராசியான எண்கள் | : 1, 5 |
| இராசியான நிறங்கள் | : கிரே, ரோஸ் |

### துலாம் : ( சித்திரை 3, 4ம் பாதம், ஸ்வாதி, விசாகம் 1, 2, 3ம் பாதங்கள் )



தொட்ட காரியங்கள் துலங்கும். கோபம் குறையும். குடும்பத்தில் மகிழ்ச்சி பொங்கும். எதிரிகள் சரணடைவார்கள். சுப நிகழ்ச்சிகள் நடக்கும். பிரபலங்கள் அறிமுகமாவார்கள். பணவரவு திருப்தி தரும். சகோதரர்களின் கோபம் தீரும். கணவன், மனைவி உறவு மேம்படும். புது நண்பர்கள் கிடைப்பார்கள். அரசு அதிகாரிகள் உதவுவார்கள். லேசான உடற்வலி, கழுத்துவலி வந்து போகும். பிள்ளைகளுக்கு உடல் நலம் பாதிக்கும். கொஞ்சம் பிடிவாதமாக நடந்துகொள்வார்கள். அவர்களை அவ்வப்போது கண்காணிப்பது நல்லது. வியாபாரம் செழிக்கும். வேலையாட்களிடம் ரகசியங்களை சொல்லிக் கொண்டிருக்க வேண்டாம். உத்யோகத்தில் வேலைப்பளு குறையும். தலைமைக்கு நெருக்கமாவீர்கள். மாணவர்கள் விடைகளை எழுதிப் பார்ப்பது நல்லது. கன்னிப் பெண்களுக்கு புது வாய்ப்புகள் தேடி வரும். எதையும் சாதிக்கும் மாதமிது.

| | |
|---|---|
| சந்திராட்டம தினங்கள் | : பிப்ரவரி 16, 17, 18ந் தேதி காலை 8.30 மணி வரை கவனம் தேவை. |
| இராசியான எண்கள் | : 6, 9 |
| இராசியான நிறங்கள் | : ரோஸ், ஆரஞ்சு |

### விருச்சிகம் : ( விருச்சிகம் 4ம் பாதம், அனுஷம், கேட்டை )



குடும்பத்தில் ஆரோக்யமான விவாதங்கள் வந்து போகும். உறவினர்கள், நண்பர்களின் வருகை அதிகரிக்கும். பணவரவு திருப்தி தரும். வருங்காலத் திட்டமொன்று நிறைவேறும். ஆடை, ஆபரணம் சேரும். ஷேர், லாட்டரி லாபம் தரும். உடல் உஷ்ணம் அதிகரிக்கும். பேச்சில் நிதானம் தேவை. சகோதரி உதவுவார். எழுத்துத் திறமை கூடும். பிள்ளைகளின் கல்வி, திருமணம், உத்யோகம் திருப்தி தரும். வாகன வசதி அதிகரிக்கும். பூர்வீகச் சொத்தில் மாற்றம் செய்வீர்கள். கௌரவப் பதவிகள் தேடி வரும். வியாபாரம் தழைக்கும். ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். புது வாடிக்கையாளர்கள் வருவார்கள். உத்யோகத்தில் பதவி உயரும். சம்பளம் கூடும். மாணவர்கள் வெல்வார்கள். கன்னிப் பெண்களுக்கு புது நண்பர்கள் மூலம் வாழ்வில் திடீர் திருப்பங்கள் ஏற்படும். எதிலும் ஏற்றம் பெறும் மாதமிது.

| | |
|---|---|
| சந்திராட்டம தினங்கள் | : 18ந்தேதி காலை 8.30 மணிமுதல் 19, 20 தேதிகளில் கவனம் தேவை. |
| இராசியான எண்கள் | : 4, 6 |
| இராசியான நிறங்கள் | : வெளிர் நீலம், ரோஸ் |

### தனுசு : ( மூலம், பூராடம், உத்திராடம் 1ம் பாதம் )



பேச்சில் நிதானம் வெளிப்படும். வெளிப் படையான அணுகுமுறைகளால் எல்லோரின் பாராட்டையும் பெறுவீர்கள். மனதில் தெளிவு பிறக்கும். கடனுதவி கிடைக்கும். அரசால் அனுகூலம் உண்டு. வரவேண்டிய பணம் வந்து சேரும். ஷேர், லாட்டரி லாபம் தரும். சகோதரி வகையில் மகிழ்ச்சி ஏற்படும். வாகனம் வாங்குவீர்கள். புதுத் திட்டங்கள் நிறைவேறும். ஆன்மீக ஈடுபாடு அதிகரிக்கும். ஆடை, ஆபரணம் சேரும். பிள்ளைகளின் போக்கில் மாற்றம் ஏற்படும். அவர்களைக் கண்காணித்து வழிநடத்துங்கள். அலட்சியம் வேண்டாம். வியாபாரத்தில் புது முதலீடுகள் செய்வீர்கள். பங்குதாரர்களை மாற்றுவீர்கள். ரசாயணம், இரும்பு வகைகள் லாபம் தரும். உத்யோகத்தில் வேலைப்பளு கூடினாலும், திறம்பட செய்து சாதிப்பீர்கள். மாணவர்கள் பரிசு பெறுவார்கள். கன்னிப் பெண்களுக்கு காதல் இனிக்கும். திறமைகள் வெளிப்படும் மாதமிது.

| | |
|---|---|
| சந்திராட்டம தினங்கள் | : பிப்ரவரி 21, 22 தேதிகளில் கவனம் தேவை. |
| இராசியான எண்கள் | : 6, 7 |
| இராசியான நிறங்கள் | : ஆரஞ்சு, ப்ரௌன் |

மகரம் : ( உத்திராடம் 2, 3, 4ம் பாதம், திருவோணம், அவிட்டம் 1, 2ம் பாதங்கள் )



அழகு கூடும். தேவையில்லாத சிந்தனைகள் வந்து போகும். தூக்கம் குறையும். கனவுத் தொல்லை அவ்வப்போது வந்து போகும். பயணங்கள் அதிகரிக்கும். சுக்ரன் நன்றாக இருப்பதால் பணவரவு அதிகரிக்கும். குடும்பத்துடன் உல்லாசப் பயணங்கள் செல்வீர்கள். சுப காரியங்களில் கலந்து கொள்வீர்கள். கணவன், மனைவி உறவு இனிக்கும். காதல் வெற்றி பெறும். வேலை கிடைக்கும். பழைய கடன் தீரும். கண்வலி வந்து போகும். பிள்ளைகளால் மகிழ்ச்சி, சமூக அந்தஸ்து பெருகும். ஆடை, ஆபரணம் சேரும். ஷேர் லாபம் தரும். வியாபாரத்தில் புது முடிவுகள் எடுப்பீர்கள். புது வாடிக்கையாளர்கள் வருவார்கள். ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். உத்யோகத்தில் வர வேண்டிய சம்பள பாக்கித் தொகைகள் வந்து சேரும். கன்னிப் பெண்களின் உயர்கல்வி திருப்தி தரும். மாணவர்கள் ஆசிரியர்களின் அன்பை பெறுவார்கள். மகிழும் மாதமிது.

சந்திராட்டம தினங்கள் : பிப்ரவரி 23, 24, 25 தேதிகளில் கவனம் தேவை.
இராசியான எண்கள் : 5,6
இராசியான நிறங்கள் : ரோஸ், வெள்ளை

கும்பம் : (அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதங்கள்)



உங்களை ஏளனமாகப் பார்த்தவர்கள் ஆச்சரியத்தை ஏற்படுத்துமளவிற்கு விரைவாக முன்னேறுவீர்கள். எதிலும் வெற்றி கிட்டும். உடல் நலத்தில் மட்டும் கவனம் தேவை. அசைவ உணவுகள் தவிர்க்கவும். குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். ஆடை, ஆபரணம் சேரும். ஷேர், லாட்டரி லாபம் தரும். வரவேண்டிய பணம் வந்து சேரும். வீடு, மனை வாங்குவீர்கள். புது முதலீடுகள் செய்வீர்கள். உங்கள் பெண்ணிற்கு நல்ல வரன் அமையும். வழக்குகள் அதிகமாகும். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். எதிலும் லாபம் வரும். புது ஒப்பந்தங்கள் செய்வீர்கள். புது பங்குதாரர்களுடன் சேர்வீர்கள். உத்யோகம் திருப்தி தரும். சக ஊழியர்களுடன் இருந்த மோதல் போக்கு மாறும். கன்னிப் பெண்களின் நீண்டநாள் கனவு நிறைவேறும். மாணவர்களின் மதிப்பெண்கள் கூடும். சாதிக்கும் மாதமிது.

சந்திராட்டம தினங்கள் : பிப்ரவரி 26, 27 தேதிகளில் கவனம் தேவை.
இராசியான எண்கள் : 6, 9
இராசியான நிறங்கள் : பிங்க், மெரூன்

மீனம் : ( பூரட்டாதி 4ம் பாதம், உத்திரட்டாதி,ரேவதி )



உங்களின் ஆளுமைத் திறன் அதிகரிக்கும். விவாதங்களில் வெல்வீர்கள். வேலை கிடைக்கும். மன உளைச்சல், தூக்கமின்மை விலகும். எதிர்ப்புகள் நீங்கும். வழக்குகள் சாதகமாகும். பிள்ளைகளின் ஆசைகளை நிறைவேற்றுவீர்கள். பெற்றோரின் ஆசி கிட்டும். குல தெய்வப் பிரார்த்தனைகள் நிறைவேறும். பணப்புழக்கம் அதிகரிக்கும். வீடு, மனை, வாகனம் வாங்குவீர்கள். சகோதரப் பகை நீங்கும். திருமணத் தடை நீங்கும். ஷேர், லாட்டரி பணம் தரும். குழந்தை பாக்யம் உண்டாகும். பழைய கடன் தீரும். அரசு உதவும். வியாபாரத்தில் லாபம் கூடும். போட்டிகள் குறையும். புது ஒப்பந்தங்கள் தேடி வரும். உத்யோகத்தில் அதிகாரியின் பாராட்டு கிட்டும். சம்பளம் கூடும். மாணவர்களின் நினைவாற்றல் அதிகரிக்கும். கன்னிப் பெண்களின் உயர்கல்வியில் முன்னேற்றம் ஏற்படும். திருமணம் நடக்கும். எதிலும் வெல்லும் மாதமிது.

சந்திராட்டம தினங்கள் : பிப்ரவரி 28, மார்ச் 1 தேதிகளில் கவனம் தேவை.
இராசியான எண்கள் : 3, 9
இராசியான நிறங்கள் : மஞ்சள், சிவப்பு

## வாசகர் கடிதம்

தமிழர் தகவல் ஆசிரியர்க்கு,

தங்கள் சஞ்சிகையில் உள்ள ஆக்கங்கள் அனைத்தும்
என் உள்ளம் கவர்ந்தவை அரசியல் – ஆன்மீகம் –
சமுதாயம் கவிஞர் கவி – சிறுகதை என்று
ஒன்றும் விட்டு வைக்காமல் உலகை வலம் வரும்
தமிழர் தகவல் ஆசிரியர் குழுவிற்கு என் பாராட்டுக்கள்

தமிழர் தகவல் என்று வெளிவரும் எனக் காத்திருக்கும்
முதல் வாசகன் நானாகவே இருப்பேன்

தமிழர் தகவல் தமிழரின் களஞ்சியமாக இருக்க
பல்லாண்டு தமிழர் இடமெல்லாம் தமிழர் கரம்
தவழ என் இனிய வாழ்த்துக்கள்

வாசகன்
கனேஸ்
இலண்டன்

அன்புடையீர் வணக்கம்,


நலம் நலமே விழைகிறோம். செப்டம்பர், அக்டோபர் மாத இதழ்கள் மிகமிகக் காலம் கடந்து வந்தாலும், நவம்பர் மாத இதழ் சரியான நேரத்தில் நேற்று 12.11.2004 அன்று கிடைத்தமைக்கு நன்றி.

ஒருக்கால் குறுக்கெழுத்துப் போட்டியால், நான் வெற்றி பெற்றால் பரிசுத் தொகையை தயவுசெய்து வெண்புறாத்திட்டத்திற்கு அனுப்பி உதவுங்கள் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்

என்றும்
அன்புடன்
மு. சுசீலா
13.11.2004

# லொம்பிற்கில் தமிழ் மக்களுக்கேற்ற Shopping Center



## Euro Travels & Tours Ltd

111-B Loampit Vale, Lewisham
London SE13
Tel : 208 465 9666
Fax : 208 465 9888

Contact : *T. Aruldass*

புதிய பொலிவுடன் லூசியத்தில்

## கற்பகம்




36, Loampit Hill, Lewisham
London SE 13 7SW
Tel / Fax : 020 8694 8810

ஞாயிறு தோறும் உடன் பங்கு ஆட்டிறைச்சி
சகலவிதமான மரக்கறி வகைகள் பழவகைகள்
உட்பட சகல தேவைகளுக்கும்
நாடவேண்டியஒரே இடம்

## KATPAGAM

துரிதப் பணமாற்றுச் சேவை

ரஞ்சன் – இலண்டன்





## EVEREST CURRY KING



*Sea Food & Vegetarian Specialist*

• Breakfast • Lunch • Dinner


24 Loampit Hill, Lewisham SE13 7SW
Tel : 020 8691 2233

## VIDEO & AUDIO

**14 Lompait Hill, Lewisham London SE13**

Tamil, Malayalam
Hindi, Telugu Films
Tele Dramas Devotional
Carnatic, Classical Cd's
Tamil Magazines
News Papers, Phone Cards







## எலுமிச்சை

*என்ன இருக்கு : விட்டமின் சி*

*யாருக்கு நல்லது :* மூலநோய், உடல்சூடு உள்ளவர்களுக்கு

*யாருக்கு வேண்டாம் :* ஆஸ்துமா, சரும நோயாளிகளுக்கு

*பலன்கள் :* சீதபேதி, ரத்தபேதி ஏற்பட்டால் உடனடியாக எலுமிச்சம் சாதம்சாப்பிட அவை நிற்கும். வயிற்றுக்குடுப்பை அடக்கி குளிர்ச்சி தரும்.



## இலந்தை

*என்ன இருக்கு : விட்டமின் சி*

*யாருக்கு நல்லது :* மகப்பேறு வேண்டுபவர்கள் தினம் ஐந்து முதல் பத்து பழங்கள் சாப்பிடலாம்.

*பலன்கள் :* ஆயுள் விருத்தி அடையும். கருமுட்டையை மேம்படுத்தும்.

## பலாப்பழம்

*என்ன இருக்கு : கால்சியம், புரதம், இரும்புச் சத்துக்கள்*

*யாருக்கு வேண்டாம் :* சரும நோய், ஜீரண சக்தி குறைந்தவர்களுக்கு

*பலன்கள் :* ஆண்மை சக்திக்கு உறுதுணையாகும். நரம்புகளை வலுவேற்றும்.

## நாவல் பழம்

*என்ன இருக்கு : சுண்ணாம்பு, மாவு சத்து.*

*யாருக்கு நல்லது :* நீரிழிவு, சீதபேதி இரத்த மூலநோய் உள்ளவர்களுக்கு.

*பலன்கள் :* ஆயுளை விருத்தி செய்யும்



## தர்பூசணி

*என்ன இருக்கு : கார்போஹைட்ரேட், விட்டமின் ஏ, சி, தாது உப்புக்கள்*

*யாருக்கு வேண்டாம் :* சளி, சைனஸ் தொந்தரவு உள்ளவர்களுக்கு

*பலன்கள் :* நா வறட்சியை போக்கும். உடல் சூட்டை தணிக்கும்.

## கொய்யா

*என்ன இருக்கு : கால்சியம், நார்ச்சத்து, இரும்புச் சத்து, விட்டமின் ஏ*

*யாருக்கு நல்லது :* நீரிழிவு நோயாளிகளுக்கு

*பலன்கள் :* மலச்சிக்கலைப் போக்கும்.



## ஆரஞ்சு, சாத்துக்குடி


*என்ன இருக்கு : விட்டமின் ஏ, பி, சி, சுண்ணாம்புச் சத்து.*

*யாருக்கு வேண்டாம் :* ஆஸ்துமா, சளி, சைனஸ் தலைவலி உள்ளவர்கள் பனிக்காலத்தில் தவிர்ப்பது நல்லது.

*பலன்கள் :* உடலுக்கு குளிர்ச்சியூட்டும், தெம்பு தரும்.



## சப்போட்டா



*என்ன இருக்கு : விட்டமின் சி*

*யாருக்கு நல்லது :* புற்று நோயாளிகளுக்கு

*பலன்கள் :* மலச்சிக்கலை போக்கும். வயிற்று சூட்டைக் குறைக்கும்.



## மாம்பழம்

*என்ன இருக்கு : சர்க்கரை, இரும்புச் சத்து, விட்டமின் ஏ, பாஸ்பரஸ்*

*யாருக்கு நல்லது :* சருமத்தில் வெண்புள்ளி, ரத்த சோகை, கண்பார்வை குறைபாடு உள்ளவர்கள் கட்டாயம் சாப்பிட வேண்டும்.

*யாருக்கு வேண்டாம் :* நீரிழிவு நோயாளிகளுக்கு

*பலன்கள் :* உடலுக்கு டானிக் போன்று செயல்படுகிறது.

## சீமை அத்திப்பழம்

*என்ன இருக்கு : கால்சியம், இரும்புச் சத்து*

*யாருக்கு நல்லது :* கர்ப்பிணிகளுக்கு, குழந்தைகளுக்கு

*பலன்கள் :* ரத்தத்தை சுத்தப்படுத்தும். எந்தவித பக்கவிளைவுகளும் தராத பழம்



## மாதுளை

*என்ன இருக்கு : இரும்புச் சத்து, புரதம், நார்ச்சத்து, பாஸ்பரஸ்*

*யாருக்கு நல்லது :* ரத்த பேதி, சீதபேதி, வயிற்றுவலி, கருப்பைக் கோளாறு ஆகியவற்றுக்கு மாதுளம் பழச்சாற்றுடன் தேன் கலந்து தினம் பருகலாம். கர்ப்பிணி பெண்களுக்கு நல்லது.

*பலன்கள் :* மேனி நிறம் சிவக்க உதவும். வயிற்று நோய்களுக்கு அருமருந்தாகும்.



## ஆப்பிள்

*என்ன இருக்கு : இரும்புச் சத்து, விட்டமின் ஏ, பி*

*யாருக்கு நல்லது :* ரத்த சோகை, ரத்தப் புற்று நோய் உள்ளவர்களுக்கு

*பலன்கள் :* மேனிக்கு மெருகூட்டி வலுவூட்டும். ஆப்பிள் சாறுடன் மாதுளை சாறும் தேனும் கலந்து சாப்பிட்டால் உடல் அழகிய நிறம் பெறும்.



## உலர்ந்த திராட்சை

*என்ன இருக்கு : விட்டமின் சி*

*யாருக்கு நல்லது :* குழந்தைகளுக்கு, பெரியவர்களுக்கு

*பலன்கள் :* வறட்டு இருமல், தொண்டை வறட்சி, தொண்டை புண், மலச்சிக்கல் ஆகியவற்றுக்கு நிவாரணி.



## அன்னாசி

*என்ன இருக்கு : விட்டமின் ஏ, பி, சி, சுண்ணாம்பு சத்து*

*யாருக்கு நல்லது :* மாதவிடாய் கோளாறு உள்ளவர்களுக்கு, ஆஸ்துமா, சர்க்கரை நோயாளிகளுக்கு

*யாருக்கு வேண்டாம் :* மூலநோய், அல்சர் உள்ளவர்களுக்கு

*பலன்கள் :* அன்னாசிப்பழச் சாறு தேன் கலவை இனிய குரல் வளம் தரும். கொழுப்பு, புரதத்தை கரைக்கும். காயங்களை ஆற்றும். உடல் மெலியும்.




## பேரீச்சம்பழம்


*என்ன இருக்கு : இரும்புச் சத்து, விட்டமின் ஏ, பி, $பி_2$*


*யாருக்கு நல்லது :* எல்லோருக்கும்

*பலன்கள் :* நிலையான ஆரோக்கியமும், நீடித்த ஆயுளையும் பெறலாம்.


WEST CROYDON-ல்
BEST FOOD
SUPER MARKET
அரிசிமா, மிளகாய்த் தூள், நல்லெண்ணெய் அவல், ஊறுகாய், வடகம், மரக்கறி வகைகள் பழவகைகள், கடல் உணவு வகைகள் இன்னும் பல உடனுக்குடன் இறக்குமதி செய்கிறோம்.
259-261, London Road
West Croydon Surrey CRO 2RL
Tel : 020 8684 6269
Fax : 020 8686 4577


Harrow-வில்
BEST FOOD
SUPER MARKET
249 Northolt Road Harrow
Middlesex HA2 8HR Tel : 020 8423 9933
' சுகி சிவம் ' அவர்களின் அனைத்துப் புத்தகங்களும் பெற்றுக்கொள்ளலாம்.
ரமணி சந்திரனின் புத்தகங்கள் யாவும் 2 பவுண் மட்டுமே
அரிசிமா, மிளகாய்த் தூள், நல்லெண்ணெய் அவல், ஊறுகாய், வடகம், மரக்கறி வகைகள் பழவகைகள், கடல் உணவு வகைகள் இன்னும் பல உடனுக்குடன் இறக்குமதி செய்கிறோம்.


உலகத் தமிழருக்கு ஒரு தொலைக்காட்சி
DEEPAM TV
தீபம்
தரமான செய்திகளும்
இப்பொழுது புதுப்பொலிவுடனும்
தீபம்
வருடம் முழுவதும் பார்க்க
95 பவுண் மட்டுமே
EAST WEST BROADCAST LTD
UNIT 1, EBURY BUSINESS CENTRE
161-163 STAINES ROAD
HOUNSLOW, MIDDLESEX
TW3 3JB U.K
Tel : +44 (0) 208 8146565
Fax : +44(0) 208 8141144
E-mail : info@deepamtv.tv
Web : www.deepamtv.tv


Hounslow-வில்
BEST FOOD
SUPER MARKET
அரிசிமா, மிளகாய்த் தூள், நல்லெண்ணெய், அவல், ஊறுகாய், வடகம், மரக்கறி வகைகள், பழவகைகள், கடல் உணவு வகைகள், இன்னும் பல உடனுக்குடன் இறக்குமதி செய்கிறோம்
364-366, Bath Road Hounslow
Middlesex TW4 7KT
Tel : 020 8577 6002
Fax : 020 8570 2323

## புத்தக வெளியீட்டு விழா

சிவநாயகம் ஐயா அவர்களின்
**SRILANKA : WITNESS TO HISTORY**
புத்தக வெளியீட்டு விழா 12.02.2005
சனிக்கிழமை சிவயோகம் ஹாலில்
நடைபெற உள்ளது. இதன் விலை 15 பவுண்
மட்டுமே. ஒவ்வொருவர் வீட்டிலும் இருக்க
வேண்டிய சரித்திர புத்தகம்.
விழா நடைபெறும் இடத்திலேயே
புத்தகத்தைப் பெற்றுக்கொள்ளலாம்

INVITATION TO A
**BOOK LAUNCH**



**SRI LANKA: WITNESS TO HISTORY**
A JOURNALIST'S MEMOIRS
1930 – 2004

on Saturday 12th February at 5 p.m.
at Sivayogam Hall,

180-186, Upper Tooting Road
London SW 17 7EJ

## க.வை. தனேஸ்வரன் மறைவு

விளையாட்டு வீரர், சமூக சேவையாளர், நல்லாசிரியர், பேச்சாளர், ஒலிபரப்பாளர், கலை இலக்கிய ஆர்வலர் இப்படிப் பல ஆளுமைகளையுடைய திரு. தனேஸ்வரன் கொழும்பில் காலமானார். சீறிப்பாய்ந்த சுனாமி அலை கொழும்பு முகத்துவாரத்தின் கடற்கரையில் 26.12.2004 காலை உடற்பயிற்சியில் ஈடுபட்டிருந்த அவரை அள்ளிச் சென்றுவிட்டமை இலக்கிய சமூகத்திற்கு ஒரு பெரும் இழப்பு. அவர் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

– அமுதன்

# கண்ணீர் அஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 04 | | 20 |
| 03 | | 01 |
| 1960 | | 2005 |



**அமரர் ஸ்ரீகணேஷகுமார்**

ஸ்ரீ கணேஷகுமார் இலங்கையில் அகால மரணம் அடைந்தார். அவரது ஈமகிரிகைகள் 30.01.2005ல் இலண்டனில் நடைபெற்றது. அவரது இழப்பு அவரது குடும்பத்துக்கு மட்டுமல்லாமல் எமது இனத்துக்கும் பேரிழப்பாகும்.

அவரது இழப்புக்கு தமிழர் தகவல் தனது இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது



Voice Telecom
international calling cards...
for Asia
<<< and other parts of the world
<<< Europe and U.S.A.
<<< for all parts of Africa
<<< Middle East
<<< Eastern Europe
and for Sri Lanka >>>
Voice Telecom
Lanka
SALES ENQUIRY
CANADA
NORWAY
DENMARK
PORTUGAL
FRANCE
SPAIN
GERMANY
SWEDEN
NETHERLANDS
UK
www.voicetelecom.com
NO line rental.... NO hidden charges.... NO calling cards
VOICE-DIRECT HOME ACCOUNT
to open an account just DIAL....
0800 519 4 519
OR 0207 177 22 00
YOU CAN ALSO OPEN AN ACCOUNT ONLINE BY VISITING OUR WEBSITE:
www.voice-direct.com

# சமாதானக் கிழவனின் சாவு

தேசியக் கவிஞர் புதுவை இரத்தினதுரை

பேச்சுவார்த்தை சுமந்து சுமந்து களைத்த
சமாதானக் கிழவனின் உயிர் போய்
இந்தோ விறைத்துக் கிடக்கிறான்
இருந்த இறுதி மூச்சையும்
வெளியில் எறிந்து
நேற்றுத்தான் விழி பிதுங்கி
மூச்சுத் திணறிச் சரிந்தான்.

...

எந்த உரிமைக்காரரும் அருகின்றி
எடுத்துப் பால்வார்க்க எவருமின்றி
வேண்டியவர்களுக்கு வார்த்தை ஒன்றும்
கூறாமல்
பொதுக்கெனப் போனது உயிர்
உயிர் கொண்டுலவிய நாளில்
ஓடிஓடிவந்த பலரைக் காணவில்லை
ஒதுங்கிக் கொண்டனர் எல்லோரும்
தனித்துக் கிடக்கிறது சடலம்
மூக்கில் நீர்வழிய கண்களில் பீளைசாறி
ஈமொய்க்கக் கிடக்கிறது இளைத்த உடல்
இழவு சொல்லிகளுக்காகக் காத்திருக்கிறது,
உறுதிப்படுத்தவதற்காக உலகம்
எவ்வண்ணம் இறப்பு நிகழ்ந்தது ?

...

மூச்சுத் திணறியதா ?
கொலையா ?
தற்கொலையா ?

...

இனிப் பிரேதப் பரிசோதனை
நடத்துவர் மத்தியஸ்த மருத்துவர்
பாவம் சமாதானக் கிழவன்
எத்தனை நம்பிக்கையுடன்
இருந்தான்
தன் பிள்ளைகள் இருவரும்
ஒன்றாய் அமர்ந்து
பேசித் தீர்த்து
தாய் உறுதியிலுள்ள எல்லைகளை ஏற்கும்
நாளொன்று சாத்தியமாகுமென
புன்னகை வீசித்திரிந்தான் பொக்கை வாய்க் கிழவன்
தன் அந்திமத்துக்கு முன்னம்
மகளும்
மகனும்
பகை மறந்து ஒருவருக்கொருவர் உருகுவரென்றும்
எதிர்பார்ப்பிலும் இடிவிழுந்துபோக
நின்றபடி சரிந்தான் நிகழ்ந்தது மரணம்
ஏனோ தெரியாது
சமாதானக் கிழவனை
பிறந்த நாளிலிருந்தே மகளுக்குப் பிடிக்காது,
ஊராரின் பழிச் சொல்லுக்கு அஞ்சி
இடைக்கிடை வருவாள்
ஏதேனும் பேசுவாள்
சந்தர்ப்பம் பார்த்திருந்து
தகப்பன் துரோகம் இழைப்பதாய்ச் சொல்லி
நிமிர்ந்து தம்பி முகம் பாராது போய்விடுவாள்
சாதுரியமாய் ஊரை வசப்படுத்தவதில்
மகள் மகாசூரி

...

சண்டையை வரிந்திழுத்துவிட்டு
அடியாட்களை ஏவி எல்லைகளை முன்னகர்த்துவாள்
தனக்கே காணி முழுவதும் சொந்தமென்ற நினைப்பில்
தம்பி வளவுக்கான தண்ணீர்ப் பங்கைக்கூடத்
தரமறுப்பாள்

...

ஒவ்வொரு தடவையும் ஊர்பழிப்பது தம்பியைத்தான்
அக்காகாரியின் ஆட்டமறியாமல்
அவளையே நம்பும் அயல்
கிழவன் பாவம்
உள்ளே அழுதபடி உறங்கிப் போவான்

...

திரும்பவும் எழுவான்
பிள்ளைகளை ஒன்றாக்க முயன்று
எத்தனை முறை தோற்று
மீண்டும் மீண்டும் எத்தனித்த கிழவன்
இம்முறை செத்தே போனான்

...

சடல ஒப்படைப்பு யாரிடம்
எடுத்துப் போகவும் வருமா
உலங்கு வானூர்தி?
மரணச் செய்தி விளம்பரத்துக்காக
காத்திருக்கின்றன எல்லா மக்கள் தினசரிகளும்
பாவம் ! கிழவன்
இனியாவது உறங்கட்டும் எரியும் வரை

# Vahizan Disc World



**Get up to 10% off !!!** **From our online shopping!!!**



## வாகீசன் டிஸ்க் வேள்ட்

எம்மிடம் மிகப் பழைய காலத்து படங்கள் தொடக்கம் இன்றுவரையுள்ள வீடியோ பிரதிகள், வீடியோ சீடிகள், டிவிடிகள் என்பன வாடகைக்கு அல்லது மிகக் குறைந்த விலையில் சில்லறையாகவோ அல்லது மொத்தமாகவோ விற்பனைக்குண்டு.

இவற்றைவிட சகலவிதமான பக்திப்பாடல்கள், கர்னாடகப் பாடல்கள், கர்னாடகவார்த்திய இசைகள் யாவும் MP3, AUDIO CD, CASSETTE ஆகியவற்றில் பெற்றுக்கொள்ளலாம்.



WE SELL TITLES FROM INRECO, GEETHANJALI, VEDU, RPG. AMUDAM AND FROM MANY OTHER FAMOUS COMPANIES !

Vahizan Disc World
52B Ealing Road, Wembley
Tel: 020 8902 8828
Email : Vahizan@aol.com
www.vahizan.com





Vmpv Video Ltd
537 High Road, Wembley
Tel:020 8902 5055
Email:Videovmpv@aol.com



# காலமும் கடமையும்

மனிதனால் இன்று மாற்றியமைக்க முடிந்த காரியங்கள் பல. காற்றைத் தடைப்படுத்த முடிந்தது. நீரைத் திசை திருப்ப முடிந்தது. வெளிச்சத்தைத் தடுக்கவும், விசையைக் கட்டுப்படுத்தவும், ஒலியைக் கேட்காமற் செய்யவும் முடிந்தது. ஆனால் காலம் என்ற ஒன்றை மட்டும் அவன் கட்டுக்குள் கொண்டு வர இதுவரை முடியவில்லை. காலத்தின் ஓட்டத்தில்தான் அவன் ஓடவேண்டியதாகிறது. அந்த ஓட்டத்தை மதித்துக் காலத்தைப் பொன்னாக எண்ணியவர்கள்தான் இன்று வரலாற்றுச் சிறப்புப் பெற்றிருக்கிறார்கள். பெரியார்கள், ஞானிகள், தலைவர்கள் என்று பெருமை பெற்றிருக்கிறார்கள். தன் நேரத்தை எப்போதுமே அளந்துகொண்டு கருமமாற்றிய ஹென்றி போர்ட் சிலவேளைகளில் தன்னைச் சந்திக்க வந்தவர்களிடமே திடீரென விடைபெற்றுக்கொண்டு விடுவாராம். முயற்சி, மூலதனம், மூளை என்றவற்றுடன் காலம் போற்றப்பட்டாலன்றி காரியம் கைகூடாது என்பதை அவர் கடைசிவரை கைக் கொண்டிருந்தார்.

ஒருமுறை யாழ்ப்பாணத்தில் முத்தமிழ் விழா ஒன்று நடைபெற்றது. அது எனது பள்ளிக்காலம். கூட்டத்தின் ஆரம்ப நேரம் வந்துவிட்டது. தலைவர் வரத்தாமதமாயிற்று. ஏற்பாட்டின்படி வந்திருந்த அந்தக் குறிப்பிட்ட பேச்சாளர் என்னை நன்றாய் இறைவன் படைத்தனன் தன்னை நன்றாய்த் தமிழ்ச் செய்யுமாறே என்ற வாக்கியத்துடன் தன் பேச்சை ஆரம்பித்துவிட்டார். அவரது பேச்சு ஆற்றொழுக்காக ஒன்றரை மணி நேரம் இடம் பெற்றது. அதன் முடிவில் பேசிய தலைவர்; இங்கு தனிநாயகம் பேசுவதற்கு ஒரு சபாநாயகம் தேவையா என்றார்கள். சபையினர் கரகோசம் செய்தனர். அன்று தலைவராக வந்தவர் சொல்லின் செல்வர், பேராசிரியர் ரா.பி. சேதுப்பிள்ளை. பேச்சாளராக வந்தவர் தமிழ்த்தூது அருட்திரு தனிநாயகம் அடிகளார். முன்னவர் பின்னவருக்கு ஆசிரியர். அவர் கற்றுக் கொடுத்த காலம் பற்றிய அருமையையே மாணவர் பின்பற்றியிருந்தார். இருவருமே அதை உணர்ந்தவர்கள் – மதித்தவர்கள்.

இலங்கையின் அதிபராக இருந்தவர் ரணசிங்க பிரேமதாஸ அவர்கள். அவர் நேரத்தை மிகவும் இறுக்கமாகக் கடைப்பிடிக்கிறவர். ஒருநாளில் குறைந்தது பதினாறு மணித்தியாலங்கள் பணியாற்றுகிறவர். இவரது அலுவலகம் எப்போதுமே சரியாக காலை எட்டு மணிக்குக் களைகட்டிவிடும். அவரிடம் ஒருவர் தன் குறைகேள் முறைப்பாடொன்றை அனுப்பியிருந்தார். அதற்கான பதில் அதிகாரியிடமிருந்து வந்தது. அதில் ஒரு குறிப்பிட்ட தேதியில் அதிகாலை 3.15 மணிக்கு தனது பிரத்தியேக அலுவலகமான சுசரித்த மண்டபத்தில் வந்து சந்திக்குமாறு எழுதப் பட்டிருந்தது. கடிதத்தைப் பெற்றுக் கொண்டவருக்கு பேரதிர்ச்சி. எனினும் குறிப்பிட்ட தேதியில் அதிகாலை 3.00 மணிக்கே அங்கு சமூகமளித்திருந்தார். சரியாக 3.15 க்கு அவர் அழைக்கப்பட்டார். உள்ளே அவர் போனபோது, வழமையான தோற்றத்தில் எவ்வித துயில்நிலை மாற்றமுமின்றி அதிபர் உட்கார்ந்து கடமையாற்றிக் கொண்டிருந்ததைக் காண முடிந்தது. இன்றும் இலங்கையில் மக்கள் ஜனாதிபதி என தன் பெயரை அவர் தக்கவைத்துக் கொண்டுள்ளமை இந்த கால அணுகுமுறையால்தான்.

இன்னொரு அதிபர், எப்போதும் குறிப்பிட்ட நேரத்தில் இருந்து ஒரு மணிநேரம் தாமதமாகத்தான் எந்த நிகழ்ச்சிக்கும் வருவதுண்டு. வெளிநாட்டுத் தூதுவரென்றாலும், சமாதானத் தூதுவரென்றாலும் இதே நிலைதான். ஒரு பெரிய நாட்டின் பிரதமரைக் கூட இப்படி ஒரு மணிநேரம் காக்க வைத்த பெருமை இவருக்குண்டு. இதுபற்றி வெளிநாட்டு நிருபர் ஒருவர் அவரது உதவியாளரிடம் கேட்டபோது, அது அவரது சொந்தப் பாதுகாப்புப் பற்றிய தந்திரம் என்றாராம். இந்த அதிபர் தன் கால இழப்புகளினால் உண்டான அழுத்தங்களை இன்று அனுபவித்து வருகிறார்.

இவற்றிற்கு அப்பால் நம் சமகாலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற இன்னொரு தலைவர் பற்றிய செய்திகளை இப்போது பார்ப்போம்; அண்மையில் அவர் எதிர்பாராதவிதமாக படிகளில் சறுக்கி காலில் முறிவு ஏற்பட்டுவிட்டது. எனினும் கட்டுப்போட்டுக் கொண்டு, தன் மருத்துவர்களின் எச்சரிக்கைகளையும் மீறி, ஒப்புக் கொண்டவாறு பேசுவதற்காக வந்தார். தான் பிந்தி வந்ததற்காக மக்களிடம் பகிரங்கமாக மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். மற்றவர்களுடைய நேரத்தை, தன்னுடைய நேரத்தின் அளவு அல்லது அதற்கு மேலாக மதிக்கும் பண்பு, மனித சமத்துவத்தை உண்மையாக மனதில் கொண்டவருக்கே கைவரும். தன்னுடைய வேதனையை விட, தான் பிந்தியதால் மக்களுக்கு ஏற்பட்ட காலவிரயம் அவருக்கு முக்கியமாகிவிட்டது. முழங்காலில் ஏற்படுத்தப் பட்ட சத்திர சிகிச்சையின்போதுகூட, காலம் தாமதமாகி அரசு அலுவல்கள் தன்னால் முடங்கிவிடக் கூடாது என்பதற்காகக் குறிப்பிட்ட பகுதிக்கு விறைப்புக்கான ஊசி ஏற்றிவிட்டு, சத்திரசிகிச்சையின் போதே பணிகளை மேற் கொண்டிருந்தாராம். இப்படி ஒரு செய்தி கூறுகிறது.

இந்த அதிபரின் காலந்தவறாத நடவடிக்கைகள் அவரது போராட்டக் காலத்திலும் பின்பற்றப்பட்டதாம்.

பற்றிஸ்தா என்ற சர்வாதிகாரியின் கீழ் கரும்புத் தோட்டத்தில் உழைத்து மாய்ந்த மக்களையும், சூதாட்ட விபச்சார விடுதிகளையும், கொண்டிருந்த அந்த நாடு 1959இல் விடுதலை பெற்றது. முதலாளித்துவ வல்லரசுகள் அவரது நாட்டை இன்றும் அழித்துவிட முயல்கின்றன. அவரது நேரந் தப்பாத செயற்பாட்டை மனத்தில் வைத்தே அவரது எதிரிகள் அவரைப் பல முறை தீர்த்துக் கட்ட முயன்றிருக்கிறார்கள். அவரைக் கொல்ல வந்தவர்கள் அந்நாட்டின் உணவுப் பயிர்களுக்கு நஞ்சூட்டிவிட்டுச் சென்றனர். அந்நாட்டின் துறைமுகத்துக்கு வராமல் வெளிநாட்டுக் கப்பல்கள் பல தடுக்கப்பட்டன. அழிக்கவும் பட்டன. எனினும் அவரது காலநேர அட்டவணையின் செயற்பாட்டை மாற்றமுடியவில்லை. மிக இளம் வயதில் மறைந்திருந்து போராட்டம் நடத்திய காலத்தில் உடைகளுக்குப் பதில் கலாத்துக்கு சாக்கை உடுப்பாக அணிந்து கொண்டு சென்றிருக்கிறார். தன் அருமை நண்பரும், வழிகாட்டியுமான லத்தின் அமெரிக்க நாடுகளின் விடுதலைத் தலைவர் சேகுவேரா அகால மரணமெய்திய செய்தி அவரை அடைந்தபோது, அவர் முக்கிய அரச அதிகாரிகளின் சந்திப்பில் இருந்தார். அதை உரிய நேரத்தில் முடித்துவிட்டே தன் ஆத்ம நண்பனுக்காகக் கண்ணீர் விட்டழுதார். அவர்தான் டாக்டர் பிடல்கஸ்ட்ரோ. கியூபாவின் அதிபர். நாற்பத்தைந்து ஆண்டுகள் பேரினவாதத்திற்குப் பேரிடியாக இருப்பவர். அவரது தனிச் சிறப்பு காலவரையுடன் ஆன நிர்வாகமும், அதன் தனித்தன்மையுந்தான். காலத்தின் பெருமையை உணர்த்தும் வள்ளுவர் இப்படிச் சொல்கிறார் :

*''வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்*
*வாழ்நாள் வழியடைக்குங் கல் ''* *(குறள்: 38)*

– கோத்திரன்


JK Gold House & Fashion House Ltd
JK
314-316 London Road Croydon Surrey CRO 2TJ
Tel : 020 8684 4577 Fax : 022 8684 4677




...தரத்திற்கு இன்றும் என்றும் தங்க நகை மாளிகை இரண்டு...

**DIAMONDS**
palace
76 Tooting High Street
London SW17 ORN
Tel : 020 8767 5333
Fax : 020 8767 5814

**MITHUS**
jewellery
322-324 London Road
Croydon CRO 2TJ
Tel : 020 8683 1756
Fax : 020 8683 1792